உ

கடவுள் துணை.

பத்மாவதி மாலையிடு நாடகம்.

இஃது

திண்டிவனம் தாலூக்கா

மைலம் மதுராப்பாளயத்திலிருக்கும்

உபாத்தியாயர்

துரைசாமி முதலியார் அவர்களால்

எழுதியதை,

கை. சு. துரைசாமி முதலியாரிடம்

சகல சுதந்தரத்தையும் பெற்று,

அமரம்பேடு

முத்துவடிவேலுமுதலியார் அவர்களால்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

1918.

[illegible]ஸ்டர்ட் காபிரைட்.

27 SEP 1[illegible]
MADRAS

G-2MDMI,P
N18
148100



கடவுள் துணை.

27 SEP 1918

பத்மாவதி மாலையிடு நாடகம்.

இஃது

திண்டிவனம் தாலூக்கா

மைலம் மதுராப்பள்ளயத்திலிருக்கும்

உபாத்தியாயர்

துரைசாமிமுதலியார் அவர்களால்

எழுதியதை,

கை. சு. துரைசாமிமுதலியாரிடம்

சகல சுதந்தரத்தையும் பெற்று

அமரம்பேடு

முத்துவடிவேலுமுதலியார் அவர்களால்


சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

விலை] ரிஜிஸ்டர்ட் காபிரைட் [அணா-6.



சிவமயம்

பத்மாவதி மாலையிடு நாடகம்

ஸ்ரீநாயகர் துதி

மங்களம்கரவீனைதம் வளர்பத்மாவதியின்காதை
துங்கமாயுரைத்தற்கே துதியடியார்தம்மை
இங்கிதமுறீடேற்றி யிகபரமிரண்டுமீயும்
ஐங்கரனிருபொற்பாதம் யானினங்காப்புத்தானே.

சத்தியதரன் கவி.

சரஸ்வதிபுரத்தையாளும் தனிசிங்கமெனவேமேலாம்
அரசியற்றுங்கெம்பீரன் மைச்சப்பிரதானியோடு
நிரமிகுமன்னர்முன்னர் சேனைசூழ்வலர்கள்சூழ
தரைபுகழ்மஞ்சபன்சத்தியதரனிதோவருகினறானே.

சத்தியதரன்-தரு.

சகமனைத்தும்நிரைந்த புகழனைத்தும்புகன்ற
சத்தியதரனிதோவந்தேன் கொலுவதரசத்தியதர
பகலவனேழ்குல மிலகலருங்கெம்பீரன்
பத்திமிகுத்திடும் உத்தமதீரன்
எத்திசையுங்கெடி பெத்தவுதாரன் (சக)

சாதுர்யமந்திரிகாடவே இன்னமும்பல
நீதியமைச்சர் கூடவே
வேதவேதியராசிர் யோதியட்சனதானவ
வேந்தர்பகுதிகளே ழிந்தருளினில்மேவ
சித்தையானகவி வரணர்தொழுதிட
சந்தமானபலர் கீதமவருத்திட (சக)

கணிகைமாதர்நடிக்கவே விருதுகட்டியக்காரர்புகழ்படிக்கவே
அணியணிபுரவியானை சேனைநடக்க
ஆலவட்டமகரத் தோரணங்கள்பிடிக்க
அருமையானகொடி கெடைஞ்சொருங்கவும்
பெருமையானசெய பேரிமுழங்க (சக)

மாதமும்மாரிபெய்யவே தனதானனிபவளப்பமெனும்நிறைய
பேதமிகுந்திடும்தபோ தனர்கள்பொருந்த [லே
புலியும்பசுவும்வொரு துறையில்தண்ணீரறுந்த
பொன்னுலகோர் மலர்மாரிதுளித்திட
பன்னிதாய்தான தர்மம்நடத்திட (சக)

பத்மாவதி மால்யிடி நாடகம்.

சத்தியதரன் கவி.

மூலகாரணனேபோற்றி முதலிலவாய்ப்பட்டாய்போற்றி
ஓலமிட்டழைக்கநேரில் ஓடிவந்தவனேபோற்றி
சீலனுனமறையோர்வேதம் செழிப்பறசெய்கோலோங்க
ஞாலமீதருள்வாய்யாதி காரணாபோற்றிபோற்றி

ராசன் தேசவிசாரணை.

சாதுர்யனேதேவர்தற்காலபூசையும் சரியாய்நடக்கின்றதா

மந்திரி.

சத்தியகுணளனேநித்தியநெய்வேத்தியமும் சரியாய்நடக்கின்றதே

ராசன் கேட்பது.

வேதவேதியர்முறைவழுவாதுமூவேளையும் விடாதுசெய்கின்றார

மந்திரி.

வேந்தனேயந்தணர்தம்மாசாரதி கிருதயங்கள்விடாதுசெய்கிறார்களே

ராசன் சொல்வது.

கன்னிலியுடன்தருமமும்முப்பத்தி ரெண்டாரம்நடந்தேறிவருகிறதா

மந்திரி.

ராசராசேஸ்வராதானதின்மேலாய் நடந்தேறிவருகின்றதே

ராசன் சொல்வது

மண்ணுயிர்தழைக்கவேமாதமும்மாரியும் வருஷித்துவருகின்றதா

மந்திரி

மாரியிவ்வருஷமோகுரைவில்லைவருமாண்டில்வருஷியாதத்தெரிகிறதே

சத்தியதரன்-தரு

மந்திரியிதென்னமிகும்மிகவுமே வருமவருஷம்மழை
குரைவுமென்றியே
எந்தக்குரியினுலே யிந்தவிதமுரைத்தாய
சிந்தைதயங்கிடவே
நிந்தைமொழிப்படித்தாய்

மந்திரி

மந்திரி-தரு

மன்னுதிமன்னனேதயவாகவே எந்தன்
மனதிற்குரியொன்றதைக் கேளுமே
பன்னுமிவ்வருஷத்தின் பின்னுங்குறையொன்றில்லை
பறிவாகவரும்மாண்டில்மழையரிதானதொல்லை மன்னுதி

சத்தியதரன்-தரு.

ஓரவழக்குறைத்தேனே புவியில்பாரதீர்வையை
வாங்கநிணைத்தேனே
நீரவிசாரியாமல் தாறுமாறுசெய்தேனே
யாராகப் பெரியோர்கள்சொன்னவைதேனே ஓரவழக்

மகதூர தரு.

மேகக்குரிசிலதைதேறியேயின்று வேர்தே
உனக்கிதனைக்கூறினேன்
யோகமிருக்கிடும் வைபோகநிறைந்தாரனே
யேகசக்கிரேஸ்பரா யோகதுரந்தரனே மேகக்கு

சத்தியதரன்-தரு.

நீதிதெரியல்குரை நேர்ந்ததோமிகும்
சாதகருக்கென்பிழை சார்ந்ததோ
யேதமறியேனரி தீதரதுரீசா
பேதையென்மனதறியாது நேர்ந்ததிதோ நீதிதெரி

மந்திரி-கவி.

நீதியில்வழுவொன்றில்லை நிருபனேபெண்கன்கரம
வேதையாலாவதன்றி வெளியிடாரதவேபாவம
மாதுசம்செல்விபத்மாவதிக்கு நன்மணம்செய்பரத
நீதினுஸ்மிலவதென்றென் சிந்தையில்குரித்திட்டேனே.

வசனம்.

கேளும் மகாராசனே தங்கள் செங்கோல்செலுத்துவதில் ஒரு
விதபிழையுமில்லை உலகத்தில் காமசாரம் இன்னதென்றரிந்தப் பெ
ண்கள் பிறருக்கு வெளிப்படுத்தாவிட்டாலும்தன்னந்தனியே அயர்
ந்து படுப்பார்களாகில் அந்த குடிக்கு தன்பம்நேரிடுமென்று பெரி
யோர்கள் சொல்லுவார்கள் ஆதலால் தங்கள் குமாரத்தி பத்மாவதி
மங்கைப் பருவமடைந்தும் கலியாணம் செய்துவைக்காம லிருப்பதி
னால் தான் இப்படி நேர்ந்ததென் றெண்ணுகுறேன் மகாராசனே.

சத்தியதரன்-கவி.

மந்திரியிதன்மைவுண்மை மணமதைசெய்யவேண்டி
தந்தையோகல்விவல்லோன் தாயரோசெல்வவாணி
அந்தமிக்கோணமாதும் யாசிப்பராதலாலே
சிந்தையில்புதல்வியெண்ணம் தெரிந்துநிச்சியத்தால்நன்றே.

வசனம்.

மந்திரி நீர்சொன்னவார்த்தை சாஸ்திர வுத்தமமானதே அதற்
கடையில்லை ஆனதால் நமது குமாரத்திக்கு மணம்செய்வதே வுறுதி

ஆயினும் ஓருபெண்ணுக்குப் புருஷன் தேடவேண்டுமானால் தகப்பன் கல்வியுள்ளவனையும் தாய் செல்வமுள்ளவனையும் பெண் கைகிறைத்துப் பொன்னிலும் கண்ணிறைந்த புருஷனையும் அதாவது அழகுள்ளவனையும் நாடுவது வுலகவழக்கமானதால் நமது குமாரத்தியின் கருத்தைபறிந்து பிறகு கலியாணத்தை நிச்சயப்படுத்துவதே நலமென்று கருத்து மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படி செய்வதுதான் எனக்கும் சம்மதம் யேனெனில் தங்கள் குமாரத்தி. பத்மாவதியம்மனே கல்வி தேல்வியில் சிறந்த சிகாமணி ஸ்ரீ பாரசத்தியம்மன்மீது பக்கத்தில்நிறைந்த நவமணியாதலால் அவனகருத்தை அறிந்து செய்வதே வுத்தமம் மகாராசனே.

சத்தியதரன்-கலி.

இணையிலாப்பங்கிமாரே யித்தகிண்ணிமாட்டம்
அணுகியேநமதுசெல்வி யரும்பத்மாவதியைநாமும்
தனியுடனழைத்ததாக சாற்றியேசிவிகைமீது
பணிவுறவழைத்தேயிங்கு பாங்குடனழைத்துவாரீர்.

வசனம்.

வாருங்கள் மந்திரிமார்களே நமது குமாரத்தியாகிய பத்மாவதிக்கு திருக்கலியாணம் செய்யும்படிக்கு யோசித்திருப்பதால் அவின் மனோபிஷ்டத்தை தெரிந்துக் கொள்ளவேண்டும் ஆகையால் நமது சமுகம் அழைத்துவாருங்கோள் வேலாளர்களே.

பத்மாவதி-கலி.

தந்தைகட்டளையைத்தாமே தாழ்மைக்கேட்டு
விந்தையாயலங்கரித்து வளைகும்பொற்சிவிகைமீதில்
சிந்தையுமகிழ்சியோங்க சேடியரருகிற்சூழ
வந்தனியுடையபத்மாவதி யிதோவருகின்றாளே.

பத்மாவதி-தரு.

வந்தாள்பத்மாவதியெனுமாது மிகவுயிலாய்
வாராள்பத்மாவதியெனுமாது வந்தாள்பத்மாவதிமாது
வடிவிலிவளுங்கிணேயேதுஇங் திராயிர்கள்மாது
இணைசொல்லவேதகாது இன்னிலமன்னர்கள்தன்னுளம்
வாடவும்பன்னருமின்னொளி கன்னியர்நாடவும்வந்தாள்
வானப்படாடையொளிவீச மாதர்க்சரசி
வாறேனென்றேசதங்கை பேசி
சொன்னப்யணிகுலுங்க மின்னலிடையிலங்க
சோதிப்பிரகாசனுதல் மீதிற்பொட்டுலங்க

பத்மாவதி மாலையிடு நாடகம்.

சந்திரன்வரவை

சந்திரன்மான்முகம்
அறிந்திடுமிச்சையு
மொளிந்திடலின்றையாய் (வர்)

அந்நேயாமவள்

ஆநிபராசத்தியைப்போற்றி
வாழ்த்தி
பாதந்தனைத்தினமும்
ஓதருங்கல்வித்தன்னில்
எப்போதுமனதைப்பொறுத்தி
நீதாரமேவைகளுந்தன்
மீதேயுராதகற்றி
சித்திரமும்பலகைத்
தொழில்நிர்த்தனம்
வித்தையுங்கற்றவள்
மெச்சவுமுச்சித (வர்)

பத்மாவதி-கொச்சகம்.

முன்னருமைமாதபங்கள் வுன்னியெனேயுதவி
பன்னருமைகல்வியெல்லாம் பயிர்ச்சியுறவேவளர்த்த
என்னருமைதந்தையரே யித்ததியிலேயழைத்த
இன்னதெனவேயருள்வீர் யிணையடிக்கேயான்சரணம்.

வசனம்.

கேளுந் தந்தையே தங்களுடைய திருவடிகளுக்கு அனேகவந்த
னம் என்னை அழைப்பித்த விபரம் தெரியச்சொல்லும் தந்தையே.

சத்தியதரன்-தரு.

அருமைகண்மணியே
யழைப்பித்தேனுன்னையே
அரைகுவேன்கேளாயிதை
நான்தானே
பருவமடைந்துதல்வர்கள்
தமக்கே
திருமணம்செம்மாலிக
நன்றுமே (அ)

பத்மாவதி-தரு

ஆமிதுநிசமேபூமியில்
புதல்வோர்
அன்னைதந்தைகட்டனைப்
படிதானே
நேமமாகடக்கில்
கேமமேயடைவார்
நீநிலத்தில்மிக
அழகாமே (அ)

சத்தி-தரு.

செல்வியுந்தனுக்கே
திருமணம்முடிக்க
சிந்தையிலெண்ணங்கொண்டேன்
நான்றானே
கல்வியில்மிகுந்த
கனிரசமேவுன்
கருத்தைவெளியிடுதல்
நலமாமே(செ)

பத்மாவதி-தரு.

எனையொருபொருட்டாய்
இதையெடுத்துரைத்தீர்
யேதென்றெடுத்துரைப்பேன்
எளியாள்நான்

அணுகினம்பெரியோர் திருவுளமெதுவோ
அதுவேயென்பாக்கிய மலவோ(ள)

சந்தி-விருத்தம்.

ஆகுமென்னருமைகண் மணியேகேளாய்
ஆடவர்க்குப்படத்தையுமே கண்ணிற்கண்டும்
வாகைபெறும்சுயம்வரத்தில் மன்னர்தம்மை
வரவழைத்துவளமைபுக முழுகையோர்ந்தும்
தேகவனுதனவளைத்தல் முதலாலோர்க்தும்
திருமணஞ்செய்நிடுவர் புவியரசர்மாதர்
ஆகையினல்வுன்கருத்தை யதனிகேரில்
அறிவித்தாலவ்வண்ணம் செய்திடுவேனம்மா.

வசனம்.

வாருமம்மா எனதருமைபுதல்வியே ராசகன்னியர்கள் தேசத்து ராசாக்களுடைய உருவின்படங்களைக் கண்ணுரக்கண்டும் அல்லதுகே ரில் சுயவரமண்டபத்தில் வரவழைத்து பார்வையிட்டும் புகழ்சொல்லைக் கேட்டும் வில்வளைத்தல் முதலானவைகளால் பராக்கிரமத்தை யறிந் தும் மாலைசூட்டுவது வழக்கமாவதால் இதுகளில் எவ்விதம்செய்ய வனக்கு சம்மதமோ அதைதெரிவித்தால் அதைப்போல்நடத்திவை க்கிறேன் வெளியிடுமம்மாள் தாயே

பத்மாவதி-தரு.

மாதவம்செய்தென்னையீன்ற தீதில்லாயென்தந்தையரே
பூதலத்தில்நிகரில்லாத பொருளும்புகழும்வேண்டேன்
குன்றினையசைக்குந்தீரவு கொண்டவேந்தர்கண்புவேண்டேன்
இன்றிருக்குமாளோபோகும் யெநிலாளதனங்கள்வேண்டேன்
கல்லியறிவுள்ளவரே கணவனென்றுநிலமைகொண்டேன்
கல்லதையறியவேண்டில் சொல்லுமொருசூட்சமுண்டு
மன்னர்கூசுயவரத்தில் கன்னயமாய்வரவழைத்தால்
என்மொழிக்கேவிடையளிப்போர் பனுமெக்தன்கணவராவார்

பத்மாவதி-கவி

அடியவனுரைக்கும்வார்த்தைக் கருமைபொருளுரைத்தோர்தாமே
கடிமணம்செய்யுமெந்தன் கணவரிதண்மையாகும்
படிதனிலெந்தனாயார் பராசத்திஞனுபுகல்கள்
முடியவோராறுமாதம் முடிந்தபின்னியமிப்பீரே.

வசனம்.

மேலுரைத்தந்தையே சுயவரமண்டபத்தில் கான்வுரைக்கும் கவிக் குப்பொருளுரைப்பவர்கள் எந்த ராசாக்களே வவர்களே எனக்கு

கணவராவார்கள் இதுவே யென்கருத்து அப்படி நியமிக்கும் கலியா
ணமும் எனக்கு ஸ்ரீபராசக்தியம்மன் கோன்பு இன்னம் முடிவுபெற
ஆறுமாதம் பிருப்பதால் அது முடிந்தபிறகு நியமிக்கும்படிகேட்டுக்
கொள்ளுகிறேன் தங்தையே.

சந்தியதான்-கவி.

நீதிலாக்கல்விதேர்ந்த செல்வியேநீயுரைத்த
ஓதரும்யோசனைக்கே வுளமிகமகிழ்ந்துகொண்டேன்
கோதிலாத்தந்தையானே குரைவரமுடிப்பேன்சேடி
மாதர்களுடனேகன்னிமாடஞ் சேர்ந்திருப்பாய்நீயே.

வசனம்.

கேளுமம்மாள் கல்வியில்சிறந்த என்கண்மணியே நீகொண்டக
ருத்து மிகவும் கண்மைபானதே வுன்யோசனைக்கு மிகவும் மனம்மகி
ழ்ந்தேன் அதைப்போல் முடித்துவைப்பேன் நீவுன் கன்னிகாமாடம்
போயிருமம்மாள் கண்மணியாகிய பத்மாவதியே.

பொது-வசனம்.

இவ்விதமாக பத்மாவதி கன்னிகாமாடஞ் சேர்ந்தபிறகுவீரா ண
புரி பட்டணத்தை அரசுசெய்து வராகின்ற வித்திரேசமகாராசன்
வீராணகரத்தில் கொலுவாகவருவது

வித்ரேசன்-கவி.

கவமணிபணிகளோடு கெளினமாமகுடம்பூண்டு
தவரிலாமந்திரிமார்கள் தளகர்த்தரருகிற்சூழ
புவிமிசையெழில்வீராண புரியாசாகிசெய்யும்
சிவனடிமறவாவித்ரேச நீரனும்வருகின்றானே

வித்ரேசன்-தரு.

பரமசிவனடியைமறவாதனுதினமும் பணியும்பத்தர்கள்நேசனும்
வித்ரேசபூபன் பரிவாய்க்கொலுவில்வந்தானே
தருமதானங்களாசுரிமைதனிலுந் தரணிபுகழ்சொல்லோலனும்
வித்ரேசபூபன் சதிராய்க்கொலுவில்வந்தானே
அடைக்கப்பிரதானிகளும் அருகிலமன்னர்கள்சூழ
நிமிதமபலவும்தேதவேவித்ரேசபூபன்கெறியாய்க்கொலுவந்தானே
சமத்தோடாரியபுகழினத்தம்மசெயலென்றமைக்குமட்டியம்கறவே
வித்ரேசபூபன் அழகாய்க்கொலுவில்வந்தானே-பர

வித்ரேசன்-கவி.

நீதிமந்திரியேகேளாய்நிசியில்நித்திரைபேய்செய்யும்
போதொருகனவுகண்டேன் புகழுமக்தலகத்தாலே

பத்மாவதி மாலையிடு நாடகம்.

ஓதொணக்கவலையெந்தன் வுளம்புகழ்ந்தலக்குறிக்க
காதலால்நன்றேதோ அதின்பெலனறிகிலேனே.

வசனம்.

மந்திரி நான் நித்திரைசெய்யும்போது ஒருமகத்தான கனவைக் கண்டேன் அதுமுதல் என்மனம் மிகவும் கிலேசத்தை யடைகின் றது எனக்கு ஒன்றுந்தோன்றவில்லை என்னசெய்வேன் மந்திரி

மந்திரி-வசனம்.

அரசே தாங்கள்கண்ட சொர்ப்பனத்தை விபரமாகச்சொன்னா லடியேன் புத்திக்கெட்டினவரையில் யோசித்துச்சொல்லுகுறேன் மகா ராசனே.

வித்தேசன்-தரு.

ஒருமுயலைப்பின்தொடர்ந்து கொருமானையெதிர்க்கண்டேன்
வருமானுலவமதிக்கவந்ததைப்பின் நிறைபடுத்தேன்
பெருமானேர்வறப்புவியை பெருவதர்க்கென்னரசிக்தேன்
திறமாகயிக்கினவை தெரிந்துரைப்பாய்மந்திரியே

வசனம்.

நான் ஒரு முயலைத்தடர்ந்துசென்றேன் அந்த குளத்தில் ஒரு மானைக்கண்டு பிடிக்கப்போக அதுஎன்னை அவமதித்துவிடக்கண் டேன் பிறகு அத்தப்பெண்மானை வலைக்கொண்டு பிடித்துவந்துகூண் டுக்குள் அடைக்கவுங்கண்டேன் அதின் வயற்றில் ஒருசிங்கக்குட்டி பிறக்கவுங்கண்டேன் அந்த இளஞ்சிங்கத்திற்கு நான்தேர்வையடை யவும் பிறகு நானே அதர்க்குச் சந்தோஷமிகுதியாக மகுடம்சூட்ட வுங்கண்டேன் ஆதலால் இந்த கினவின்பலனை இன்னதென்று யூகி த்தறிந்துரைப்பாய் மந்திரி.

மந்திரி-தரு.

மூன்றிக்கண்டமுயல்மானுகும் அதின்பின்றிக்கண்ட
முயல் பெண்ணுகும்
அந்தப்பெண்ணைக் கலியாணஞ்செய்வீரொரு
ஆண்பிள்ளையைப்பெறுவீர் வீராசே முன்றிக்

மந்திரி-வசனம்

கேளும் வித்தேசமகாராசனே தாங்கள் கண்ட முயல்மானுகக் கூடும் அதைத்தடர்ந்து சென்றபோது எதிர்ப்பட்டமான் ஒருபெ ண்ணுகக்கூடும் அந்தப்பெண்ணை நீங தாங்கள் கலியாணம் செயயவே ண்டிவரும் அந்த மாதரசியின் வயிற்றில் பிறக்கும் பாலனுக்கு தாங் ள மகுடம் சூட்டுவீர் அது நிச்சயமான கனவாக யிருக்குமாயின்

பத்மாவதி மாலையிடு காட்சி.

...வ இந்த பலனைத்தரல்வேண்டும் பிறகு கடவுளுடைய...
...தை யாரறிவார் அய்யனே.

பொது-வசனம்.

இவ்விதமாக ராசன்கண்ட கனவை மந்திரியிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது வீராணபுரி பட்டணத்திலிருக்கும் குடிகள் வருவது.

குடிகள்-தரு.

இட்டபயிர்களெல்லாம் போச்சுதேகாம்
யென்னுளுமிருந்ததெல்லாம் மாறவுமாச்சுதே
கஷ்டப்பட்டோமென்ற பேச்சேயதினுல்
கஞ்சிக்குடிச்சோமென்ப தில்லாமல்போச்சே
மிருகத்தால்கெட்டகுடி யாச்சேபாழும்
வரியைகேளுத்தரல்வுடன்வரும் பெருமூச்சே
போவோம்யரசனிடநேரில் யிக்தபொல்லாத
அலங்கீரலத்தைச் சொல்லுவோம்வாரீர் (இ)

குடிகள்-வசனம்.

சரணம் சரணம் மகாராசனே நாங்களிட்டபயிர் பச்சலெல்லாம் கரடிபுலி காட்டுப்பன்றி மான்கடம்பை மதயானை முதலிய மிருகங்கள் நாள்தோறும்வந்து நாசமாக்கி விட்டது அய்யா இனிமேலிக்கு எப்படி பிழைப்போம இத்தவருஷம் எப்படி வழுவுவரிகட்டி எங்கள் பெண்ஜாதிபிள்ளைகளை எப்படி காப்பாற்றுவோம் மகாராசனே.

வித்தியாசன்-வசனம்.

அப்படியா ஆ குடிகளே நீங்கள் பயப்படவேண்டாம் இன்றையத்தினமே நான் வேட்டைக்குச்சென்று அந்த மிருகங்களை அதாகுதப்படுத்தி உங்களை ரக்ஷிக்கிறேன் மேலும் இன்றுமுதல்இரண்டுவருஷத்திய தீர்வையை தள்ளிக்கொடுத்தேன் நீங்கள் சுகமாகப்போய் வாருங்கள்

வித்தியாசன்-கவி.

இடும்பலபயிர்களெல்லாம் யியம்பியமிருகத்தாலே
கெடுதியாய்ப்போகுதென்று இளத்தியதினுல்நாமும்
விடும்பலகருவிகொண்டு வேட்டைக்குப்போகவேண்டும்
அடும்பலசேனைதன்னை யமைச்சரேவரச்செய்வீரே.

வசனம்.

மந்திரி நாம் வேட்டையாடப் போகவேண்டும் ஆதலால் கன்னிவலை செந்நாய் முதலியவைகளோடு வேடர் வில்லியரை வரச்செய்து சீக்கிரமாக வேட்டைக்குப் புறப்படுங்கள் மந்திரிமார்களே.

மந்திரி-வசனம்.

அப்படியே யிதோ யாவரும் தயாராயினும் யானும் பிரயாண மாகிவிட்டேன் இனி புறப்படுவீர் அரசே.

வித்ரேசன்-தரு.

வேட்டையாடுவோம்வருவீர் கனவீரர்களேரணசூரர்களே
வனவேட்டையாடுவோம் வாரீர்
காட்டிர்க்குடிகள்மனம் வாட்டமடைந்திடவே
கூட்டம்கூட்டமாய்வரும் காட்டுமிருகங்களே
கோரமானசரம்மீறியழிக்கவும் காரும்பாருமூயிர்பாரில்
செழிக்கவும்(வேட்டை)

போகும்புலியைவெட்டி புதரில்பன்றியைவாட்டி
யேகும்கரடிகளே இருபிளவாகத்தீட்டி
இணையில்லாதமதயானைத்திறள்சிகட களைகளையேயெவி
மிருகராசிகள்துணிபட(வேட்டை)

வித்ரேசன்-கவி.

காட்டினிற்பயிர்கள்தம்மை காளடியிலழித்த
காட்டினிலிருகந்தன்னை கண்டதண்டங்கள்செய்தோம்
பூட்டியேவலியைத்தாண்டி போகுமிம்மாணைநானே
தாட்டியாய்ப்பின்றுடர்ந்து செயம்செய்வேன்பாரும்மந்திரி.

வசனம்.

அப்பா மந்திரி பிரதானிகளே எல்லாமிருகங்களையும் வெகுவா கத்துரத்தி விட்டோம் ஆகிலும் அதோ கட்டியிருந்த வலையைத் தாண்டி ஓடும் கலைமானைப் பின்துடர்ந்து சென் ஓருவனுமே செயம் செய்து வருகுறேன் நீங்கள் இங்கேதானே தங்கியிருங்கோள் மந்தி ரிமார்களே.

வித்ரேசன்-தரு.

போகுதுபார் வொருமான்விடுவேனே சான்விடுவேனே
பின்னிடைவேனே போகுது
வலையைத்தாண்டி நிலையைத்தூண்டி
மலையைத்தீண்டி நிலையைவேண்டி போகுது
கருவிகளைத்து தருவிலொளித்து
வெரிவிலழிந்து தரிசில்குத்தி போகுது

வித்ரேசன்-கவி.

கானகந்தனிலிரண்டு காததத்திற்கதிகமிந்த
மானினைத்தடர்ந்துவந்தேன் மாய்மானதையுங்காணேன்
வானுரவொளிரும்பூங்கா வனமேதோதோற்றுகின்ற
தானதாலக்குதண்ணீர் அருந்திபின்னேகுவேனே.

வசனம்.

ஆஆ இது என்ன ஆச்சரியம் ஒருபட்டணத்திற் கருகாமையில் வந்துவிட்டதாகத் தோற்றுகின்றது முன்னாளில் ஸ்ரீராமரை தனித்துக்கொண்டுபோன பொன்மானைப்போல் நம்மை இவ்வளவு தூரம் கொண்டுவந்தும் இந்த மான்முகிலில் மாயமாக மறைந்துபோய் விட்டது நமது சேனைகளைவிட்டு இரண்டு காதத்திற்கப்புறமாக வந்துவிட்டோம் இதுவும் சிவன் செயல்தான் தாகவிடாயோ அதிகரிக்கின்றது அதோ குளிர்ச்சி பொருந்தினதாகவும் குயில் கிள்ளை முதலிய பட்சிகள் வசிப்பதாகவும் ஓர் இருண்டசோலைகள் தோற்றுகின்றபடியால் அவ்விடத்தில் தடாகமுதலிய நீர் ஆகாரமும் பேதேனும் இருக்கக்கூடும் ஆதலால் அவ்விடம்சென்று தண்ணீர் அருந்தி யிளைப்பாறி பிறகு சேனையிருக்குமிடம் செல்வோம்.

பத்மாவதி-கவி.

பாங்கியேசொல்லக்கேளாய் பாரசத்திபூசைக்காக
சங்கொருமலர்கள்கொய்து யிலேசெனமகித்திடாத
தீங்கொருமலர்கள்கீக்கி சிக்தையோர்வழிப்படுத்தி
நீங்கொருமலரெடுத்தல் நெறியெனபறிகுவாபே.

வசனம்.

கேளாய் என்னருமைத்தோழியே நாம் இதோ நந்தவனம் வந்து சேர்ந்தோம் இனிமலர்க்கொய்ய வேண்டுமல்லவா பூசைக்கு மலரெடுக்கவேண்டுமானால் லேசான காரியமல்ல வண்டு மொகராததும் மதுவொழுகிப் போகாததுமாகிய அன்றுமலர்ந்த புஷ்பங்களேயும் கீடம்புழுக்கூடு கிவாய்அரும்பு சேதப்படாமலும் மகாசாக்கிரதையாகவும் ஓர்வழிப்பட்ட மனதுடன் மலர்களைக்கொய்வோம் வாருங்களம்மா என்னருமைத் தோழிமார்களே.

பத்மாவதி-தரு.

சேடினுமிருவருந்தாமேயிதோ திவ்வியமலரெடுப்போமே
அந்தமேடருமசிவபூசைக்காகமது சிந்தையில்பயப்க்கியாக
மல்லிகைமுல்லிசெண்பகமும் இருவாட்சிமக்தாரைப்பலவிதமும்
வில்வமலருந்தும்பையருகும்புகழ் மேவுமம்மருக்கொழுந்தும்மருவும்
கோங்குசாமந்திதாமரையும்சற கொன்றைதுளசிபுன்னைமலரும்
பாங்காம்பலொடுபாரிசாதமும்மயிந்தப் பவழமல்லிகைமலர்சூதமும்
சாமந்தியொடுகோகலிங்கமும் செந்தாழைமடலுங்குருவிந்தமும்
காமன்கணை யுக்குரொச்சியும்செங்காந்தள்கருங்குவளைவிருக்ஷமும்
(சேடினுமிருவருந்)

விதூஷகன்-தரு.

மாமரச்சோலையும்பூங்குயிலோசையும் வளர்தென்றலீவீசுவதும்
அந்தவர்ணக்கிளிகன்னிகளேக்கோகிலே வாசகம்பேசுவதும்
நேமமதாகமயில்கள்நடித்திடும் நேர்மையுமானந்தமே
நெஞ்சுலர்தாகமும்மிஞ்சுதேயென் செய்வேன்நீரணிசங்கரனே
சந்தியனமேதோற்றுதுதுளள
அங்கேநாடியேவண்டுகை-பாடியுமபூங்காரம்நாதமென்னசொல்வேன்
செந்தாமரைப்பொய்கைகண்டேனகண்டேனினி தீர்வேனென்
தாகமெல்லாம்
எந்தன்சிந்தைகளித்திடத் தந்தாயித்தண்ணீரை(மாமரச்)

விதூஷகன்-வசனம்:

ஆ ஆ இதென்ன திருமாலும் மகாலட்சுமியும் நீராடுந்தடாகமா சங்கரசடாதரனே.

விதூஷகன்-தரு.

ஆ ஆயிந்தநதிவிந்தையை நானென்னுசொல்லுவேன்
ஆ ஆயிந்தநதிவிந்தையை நானென்னுசொல்லுவேன்
சுந்தரமிகும்படி யமைந்திருப்பதும்
நற்செந்தாமரையோ முதல்மலர்ந்திருப்பதும்
பக்திப்பக்தியாய்பறவைகள் நிரைந்திருப்பதும்(ஆ ஆ இக்)

விதூஷகன்-வசனம்.

ஆ ஆ இந்த தடாகத்தின் அழகேஅழகு இதென்னநாற்புரத்திலும் மிருதுவாகிய சலவைக்கற்களால் கட்டியிருக்கும் படிகளின்வண்மையும் கபடமற்றவருள்ளம்போல் தேழே மணல்தோன்ற துள்ளிதமாகத்தெளிக்து நிறமபியிருக்கும் சலத்தின்தன்மையும் இடைவிடாது அலர்ந்து தேன்குளித்து விளங்கும் நெய்தற்கொடி நீலோற்பலம் செங்கழுநீர் ஆம்பல் செந்தாமரை வெண்டாமரை மலர்களின் சிங்காரமும் அம்மலர்கள் ஒவ்வொன்றின்மீது மதித்த இனிமையான மதுரசங்களே உண்டு சப்திக்கும் வண்டுகளின் சிங்காரமும் செங்கால்நாரை தாரா அன்னப்புள் முதலிய நீர்வாழ்ப்பட்சிகளின் உல்லாசமும் தெள்ளியநீரில் பாய்ந்து விளையாடும் மச்சங்களின் சல்லாபமும் என்னென்று தான்சொல்வேன் அடா இதென்ன வண்மை இப்படி இருக்கின்றதே இதில் பிறங்கி தண்ணீரருந்தி அதின் இனிமையும் டார்ப்போம் தாகவிடயுந்தீர்ப்போம் ஆ ஆ என்னகேர்த்தி என்னகேர்த்தி இந்த நீரின் ருசிகரத்தை என்னென்று வர்ணிப்பது இதிற் கற்கண்டு சற்கரையைத்தான் நிறையக்கொட்டி கரைத்திருக்குமோ அப்படியா அது டித்திராதே சளிப்பேரிவிடுமே தேங்கிளரீரை ஆத்தி

பத்மாவதி மாலையிட்டாட்டம்.

நிறப்பி இருக்கக்கூடுமா யேது இவ்வளவு நீர் எப்படி கிடைக்கும் கிடைத்தாலும் காட்டில் கெட்டுவிடும் யேதோ இது இப்பூமியின் சாரமென்றே தான் யோசிக்கவேண்டும் இதுவும் ஒரு அற்புதக்தான் நல்லது இக்த தடாகத்தை சுற்புரத்திலும் சுற்றிப்பார்த்து வரு வோம்.

பத்மாவதி-தரு

பாங்கியிதென்னடி - பரவசமாகுதடி
இங்குயெத்தனையழ இன்பம்பெருகுதடி பா

இடதுதோள்துடிக்குதடி யிடதுகண்துடிக்குதடி
வடிவழகியேயெந்தன் மயிர்க்கூச்செறிகிறது பா

என்னடியின்றுபுரை யேறுதடிக்கடிக்கி
கன்னிபரேபானுக்தக் கண்ணீர்சிந்துதெனக்கு பா

வித்ரேசன்-கவி.

காட்டினிலிந்தவாரும் நல்வேட்டைகோர்ந்தவாரும்
காட்டினிற்றனத்தைவிட்டு கலியின்பின்றுடர்ந்தவாரும்
வாட்டியேதாகத்தண்ணீர் வக்தெடத்திக்தவேளைக்
கேட்டதம்விர்தைவிர்தை கிளற்றவேயறிவோநாமும்.

வசனம்.

ஆ ஆ இன்று ஒவ்வொன்றும் ஒரு விர்தையாகவும் என்றும் கா ணுததும் கேளாததுமாக இருக்கின்றனவே அடா நமது பட்டணத் திலிருந்த நமக்கு திடீரென வேட்டைகோர்ந்ததும் வேட்டையாடுமி டத்தில் சேனைகளைப்பிரிந்தும் மானைத்தடர்ந்தும் தாகம்தீர இந்த தடாகத்தருகில் வந்ததும் ஆச்சரியமென்று நினைத்தோம் அதுகளை ல்லாம் ஒரு ஆச்சரியமல்ல இதோ கேழ்க்கும் மிருதுவான தொனியி ன் ஆச்சரியமே ஆச்சரியம் ஆ இதென்ன் மான்குயிலின் குறலோசை யோ வான்கிளியின் தீஞ்சொல்லோ அல்லது வேய்க்குழலின் இனி யதத்தமா அன்றி வேணுநாதமா யேதேது அதுகளல்ல பின்னை எது வாயிருக்கலாம் தம்புரு ஈரதர்செய்யும் வீணைக்கியானமாக மிரு க்கக்கூடுமா அல்லது அதுவாயிருந்தால் இப்படி மனதைக்கவ ரப்பண்ணுதே யன்றி ஆகாயமார்க்கத்தில் அல்லவோ கேழ்க்கும் நல்லது உற்றுக்கேழ்ப்போம் ஒஓ இந்த கானகத்திற்குவடபுறமிருக் கும் நந்தவனமார்க்கமாக வன்றோ கேழ்க்கின்றது நல்லது இந்த டாகத்தின்கரைமீதேறிப்பார்ப்போம் ஆ ஆ இதுவென்னமின்னலோ மின்னுவதற்குக் காரணமில்லையே வானத்தில் மேகத்தையுங் காணே மே இது என்ன இந்தயிடம் இந்திரசாலம் மயேந்திரசாலம்நிறைந்த இடமா என்ன ஒவ்வொன்றும் அற்புதமாகவே தோன்றுகின்றதே இவைகள் மாயமாயிருக்கக்கூடுமோ ஆகா.

விதூரேசன்-சிசபத்தியம்.

காண்பதும்வுண்மையே கனவோயிதென்னிட
கண்களின்தோற்றமோ கானஞளிவோ
காண்பதுமவுண்மையோ கனவல்லனன்றினைவிதே
காணவொளியல்லவிது கருதுமுருவே
பூம்பாவையோபசும் பொன்னுலமைத்திடும்
பொலிவானபதுமையோ புலமறிகிலேன்
பூம்பாவையல்லவிது புகழாகவசைவதால்
பொர்ப்பதுமையல்லவிது பூவைமாரோ

பொன்னுலகமாத சென்றுல்
புவியில்பாதம் பொருந்திடாதே
மன்னும்வன தேவதைகள் பிங்கு
புஷ்பம்வந் தெடுப்பார்
பன்னுநிவிபத்தினிக ளென்னீ
லிவராபரணம் பலிதமேத
இன்னிலத் தரசர்களில்
எவர்பெண்களோ யேதுமறியேன்

விதூரேசன்-தரு.

ஆரோயிவராரோ எந்த ஊரோயறியேனே எழில்
அன்னநடைமின்னுசடை பின்னலிடைமன்னுமிவர் ஆ

சீரோடிவர்பேரூரென்னு நேரோதெரியேனே நல்ல
சித்திரமிருத்தவறு மெத்தனவருத்தவர்கள் ஆ

விதூரேசன் கொச்சகம்.

வானுலகமங்கையரோ மண்ணுலகிலேயரசர்
தானளித்தகங்கையரோ தையலரேநீங்களரும்
யீனமில்லாவன்னகரம் யீன்றதில்லதாய்பெரும்
நானியவுங்களிட நாமமதைப்புகலிர்.

வசனம்.

யேமாதநிரோன்மணிகளே நீங்களென்ன தெய்வலோகப்பெண்களோ அல்லது இந்த பூலோகத்துக் கன்னிகைகள்தானே அப்படியானுல் யெந்தமதேசத்து ராசகுமாரத்திகளோ அதையும் வுங்கள் தாய் தந்தையர்கள் பெயரையும் சித்திரவிச்சித்திரம் பொருந்தியவுங்கள் பெயரையும் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன் தயைசெய்து தெரிவிப்பீர்கள்.

வித்ரேசன்-வசனம்.

நான் கேட்டதற்கு என்னபதில் ஒன்றுங்காணமே என்மீது கோபமா அல்லது மனஸ்தாபமா அப்படி குற்றமாக நான் ஒன்றும் கேழ்க்கவில்லையே இதை சொன்னுலென்ன

வித்ரேசன்-தரு.

வாய்முத்துதிர்ந்திடுமோ மனதாரனேர வொரு
வார்த்தையில் குரைந் திடுமோ
நாமத்தையுரைத்திடிலே மெத்தயிகழியே
நருமாமலரேகொய்திடும் திருமாதர்களேவும்மிட வா

பத்மா-தரு.

பூசைக்குமலரெடுக்கும் அதுபோதில்நீதான்
பேசுவதெங் கடுக்கும்
வாசமுடன்தனித்து மாதரிருப்பிடத்தில்
வாவுந்தருமோ மன்னர்கள்
தரிதாய்ச்செல்லவே பன்னடி பூசைக்கு

வித்ரேசன்-தரு வேறு.

வேண்டுமென்றமலரெடுத்து நான்தருறேன்கொடுத்து
மெல்லியரேஉங்கள்பெயர் சொல்லவேணுமெந்தனுக்கு வெ

பத்மா-தரு.

மெல்லியரேயென்றவீணுப் வல்லடிவழக்குரைத்தாய்
நல்லதோஆண்பிள்ளைகட்கு நாணமிராதோமனதில் மெ

வித்ரேசன்-கவி.

சதுரியாய்நடவுமென்ற சற்குணநங்கையாரே
நலமிகுவுங்கள்பேரும்நகருந் தரப்தத்தைபேரும்
பரிதமாயுரைக்கிற்சொல்வேன் பகர்த்திடாவரையிலிங்கே
நிலையதாயிருப்பேன்யென்னே நீங்களென்செய்வீர்பார்ப்போம்.

வசனம்.

நல்ல குணத்தையுடைய மெல்லியர்களே நந்தவனத்தை மாத்தி ரம் விட்டுப்போகச்சொன்னீரே ஓழிய நான் கேட்டதற்குப்பதில்ஒ ன்றும் காணுமே நல்லது யிப்போதாகிலும் சொன்னுல் வடனே போய்விடுகிறேன் சொல்லாதவரையில் இவ்விடத்திலிருக்கிறேன் எ ன்னசெய்வீர்கள் பார்ப்போம் பெண்களா.

தோழி-வசனம்.

சரஸ்பதி புரத்தையாளும் சத்தியதர மகாராசன் குமாரத்தி யென்னும் பத்மாவதியென்றும் நாமதேயமாகும் போம்போம் மகா ராசனே.

விக்ரேசன் வசனம்.

ஆஆ இப்போ தகும்தகும் ஏ பத்மாவதி! என்னும் அழகிய பொற்பாவையே! உனது செம்பவளவாயைத்திறந்து நீ சொல்லவேண்டுவது இன்னம் ஒருவிஷயம்தானிருக்கிறது அது என்னவெனில்,

விக்ரேசன்-தரு.

அன்னமேமாமணியே அழகாரணவமணியே
உன்னைமணந்தவன்யார் அந்தவுத்தமன்பேர்யாதோ
இன்னம்வுனக்கேமணம் ஆகவில்லையெனறியேன்
நன்னயமாயழைத்தால் இதோனானேடந்திடுவேன் (அன்)

பத்மாவதி-தரு.

மானேமயிலேஎன்றும்இது வுறையுமென்றும்
யேனைபினத்துநீர் இனு வுமக்கென்னவரும்
ஆனுலெனக்குகலியாணமு மாகவில்லை
நானேவுறைத்தேனிதோ யினியேனுடந்திடுவீர் (மானே)

விக்ரேசன் வசனம்.

சொம்பவிசேஷம் சொம்பவிசேஷம் கடவுள் காட்டிக்கொடுத்த தேகபேஷும் கூட்டிவைப்பதே குருகடாட்சம் அடிமனைரைஞ்சிதமே நீ உன் வாலாற்றை சொன்னுயல்லவா நான்யார் வுனக்குத் தெரியுமா?

விக்ரேசன்-தரு.

அன்னமேவீராணகர்உன் னிதமுடனேயாள்வோன்
யானடி நிசந்தானடி
கன்னியேஎனக்குமணம் இன்னமுமில்லையேதன்பம்
காணுவாய் இன்பம்பூணுவாய்
கற்பனெதெரிய அற்புதமயிலே
இப்பொழுதேஎன்னை ஒப்புக்கொள்வாயே. (அன்)

பத்மாவதி-தரு.

என்னவார்த்தைசொன்னுய்மன்னு இன்னமும்பகல்பேசாமல்
யேகுவாய் குரைவாகுவாய்
மன்னனேஎன்னைவேண்டினுல் பன்னருஞ்சுயவரத்தில்
வருகுவாய் விடைதருகுவாய்
மானிலமரசர் நிதானமுமிதுவோ
ஞானிஎனசொல்வது தானினிஎதுவோ. (என்ன)

விக்ரேசன்-தரு.

அந்தநாளிதுவரையில் நின்றிடாதுதுயிசமேன்
ஆவியேபிராண சஞ்சீவியே

சிந்தையில்மகிட்சியாக இத்தரள்கார்த்தர்வமாக
சேருவாய் தயைகூருவாய்
சித்திரகு சத்திவிணர்திடுவாயே
சத்தியமாகயென் பத்தினிநீயே. (அந்த)

பத்மாவதி-தரு.

சேறுவாய்எணியேநேரில் தாருமாறுய்பேசவர்தீர்
செல்லுமோ வார்த்தைவெல்லுமோ
சிறணிசகுத்தலிப்பெண் தாறணிதிஷ்யர்தனே
சேர்ந்ததும் வுயிர்சார்ந்ததும்
செகமரியாதோ புகல்வதுமேதோ
முகிவிதுவாமே வுன்னகரிணைபோமோ (சேறு)

வித்ரேசன் வசனம்.

என்னைப் போமென்றுசொல்ல வுனக்கு மனம் எப்படிவந்ததடி வுன்னைப்பார்த்த யென் இரண்டுகண்களும் வேறொன்றையும் பார்க்குமோ என்வுயிர் பிரிந்துப்போய்விடும்படி என்மேல் வர்மம் வேண்டாமடி.

பத்மாவதி-வசனம்.

எல்லாம் யேனிங்குபேசுகின்றீர் என்னைக்கார்த்தர்வ விவாகம் செய்ய எண்ணுவது ஒருக்காலும் கூடிவராது நடவும் நடவும் மகாராசனே.

வித்ரேசன்-தரு.

அந்தவிதமில்லாவிடில் அன்னமேதேனே வுன்
தந்தைபாலழைத்துசென்று சாற்றுவாய்மானே

பத்மாவதி-தரு.

தந்தைபாலழைத்துப்போக காசியோனுனும் இந்த
மந்திரத்தால்மாங்காய்விழ மாட்டாதென்றேனே. (தந்)

வித்ரேசன்-தரு.

மாளாதென்றுல்லன்படத்தை வரைந்துதருகிறேன் அதை
காட்டிநாளையேதந்தையா லங்கழைத்தால்வருகிறேன். (மாளா)

பத்மாவதி-தரு.

படத்தாலந்தசித்திராங்கி பட்டதறிவாயோ இங்கு
நடக்காதொருபோதும்போம்போம் நானுஞ்செல்வனே (பட)

விக்ரேசன்-வேறு-தரு.

காதலாகினேனேமதராசன் வேதைதாளேன்யானேமடமானே
போதிருக்கிட்டேனேஉயிரோடும் காருணதருண்பாரூய்
கனிவாய்முத்தம்தாராய் எனதுமையல்தீராய்
வாராய் என்கண்ணே
கதிஇலையே இனிவுனைவிடவேரே
கதியிதுவே எனையகலவிடாதே. (கா)

பத்மாவதி-தரு.

இன்னமென்னசொன்னாய் வீண்வாதுதன்னைப்பேசவந்தாய்தகாது
உன்னிப்பாரும்கன்றாய் யேதேதுதத்தாறுமாறூய்
பினத்தினென்னென்னமோ வுள்ளத்தில்எண்ணினாயேதோ
புத்தினத்தாலும் யெத்த
தாபமும்மேகமும் லோபமும்காவாய்
பூபனேமுன்னே நீஇனியகலாயே. (இ)

விக்ரேசன்-கந்தார்த்தம்.

பஞ்சணைமெல்லடிகொஞ்சிய னன்மொழிரஞ்சிதமேனையே
வஞ்சனைசெய்திடவும் சரியாகுமோ அருகில்.

தரு.

வாடிஅன்பாயோர்முத்தம்தாடி மதனனூலிப்பாடி
லீலைகள்வினையாடி கூடுவோமாடி
மருவிவருவிடினுயிர்வதும்நிலையே தருவாதினிவிடுவதுமிலையே.

பத்மாவதி-கந்தார்த்தம்.

சொற்தமிருத்திடும்பைக்தொடி எனவேசொல்லாமொழிசொன்னாய்
சித்தையிலெண்ணிநினைந்ததை செப்பினாய்அடா.

தரு.

சிசி இதெனக்கடுக்கும்பேச்சி இதினல்வரும்தாகி
நீயேஇதற்குஆகி வாய்வீச்சில்லாமல்
சித்தமலைந்துலகத் தருமுன்போல்
இத்தரைகாண்கிலேன் பித்தனேபோம்போம் (சிசி)

விக்ரேசன்-கந்தார்த்தம்.

இத்தனைவிதமாய்க்கெஞ்சி இசைத்துமென்னடிசிமாட்டி
கத்தனித்தைகனேக்காட்டி கைநீட்டிப்பேசிப்போறாய்
எத்தனைகாலாலுமும்காளே உன்தனமணர்ந்து
அடிசித்தினி சிரிக்கிவுன்னை.

தரு.

சிறையில்வைப்பேனே வைக்காவிட்டால்அரசனுக்காகனே
பரிவாயரசனென்றுமறவாதே தினமாதே
பட்டிகிரிக்கிஇதைக் கெட்டியாய்நினைபடி. (சிறை)

பத்மாவதி-கர்த்தாத்தம்.

அரசனென்றுலுமென்ன அன்னீதிக்குமுன்னுவாரோ
சரிசரிஎனைமணர்ந்து தான்சிறைவைக்கநேர்ந்தால்
உரிமையாயுனக்கேபின்னே வுனையுரியாமல்பெற்று
தெரிவுற அவனுலுண்னே.

தரு

சிறையில்லைவப்பேனே வைக்காவிட்டாய்அரசியோகானே
தறணியில்காளிந்தி சபதம்கெலிக்காவிட்டால்
தாசிமகளல்லது ராசன்மகளாவேனே (சிறை)

வித்திரேசன் வசனம்.

சபாஷ் சபாஷ் நல்லதடி பத்மாவதி வுன்னுல் செய்யமுடியுமா.

பத்மாவதி வசனம்.

உம்மால்முடிகிறபோது எம்மாலும் முடியும்போம்போம் புத்தி யில்லேரனே.

வித்ரேசன்-கலி.

ஆஆஎனதுநெஞ்சம் அருக்குதேசொன்னசொற்கள்
தோசையைமணர்ப்பதென்றே சொற்படிமுடிப்பதென்றே
வாதொடுபடைகள்நம்மை வழிப்பார்த்துஇருப்பாறங்கே
எருவோம்பின்புநேர்வ தெதுவோரானறிகிலேனே.

வசனம்.

ஆஆ ஒருபெண்பால் அலக்கியமாக என்னவார்த்தைகள் சொல் லிப்போனுள் அடா புத்தியற்றவனேயென்றும் பித்துப்பிடித்தவனே யென்றும் அவள் சொன்னசொற்கள் ஒவ்வொன்றும் என்மனதை வாள்போட்டன்றே அருக்கின்றது சீசி சாமங்கெட்டதே கெட்டது அத்தோடும்போகாமல் அவளைக் கல்யாணம்செய்வதாகவும் சடுஞ் சிறையில் வைப்பதாகவும் சபதம் கூறிவிட்டோமே அதுதான் அப் படியே முடியுமென்று என்னநிலை நல்லது பிறகு எப்படிநேர்ந்தாலும் நேரட்டும் சேனைகள் நமக்காக கார்த்திக்கொண்டிருப்பார்கள் ஆத லால் அவ்விடம்சென்று சேனைனியங்களுடன்பட்டணம்போய்ச் சேருவோம்.

சத்தி-விருத்தம்.

சதுர்வுபாயந்தீர்ந்த சாதுர்யமந்திரிகேளாய்
மதிஜுதலெழில்நம்பத் மாவதிபராசத்திகோன்பு
துதியுறமுடிந்ததாலே சுயவரம்நன்மைக்காக
விதிகுலசாஸ்திரிமாரை விரைவினில்வருவிப்பீயே.

வசனம்

கேளாய் மந்திரி நமதுகுமாரத்தி பத்மாவதியின் மொழிப்படி க்கு ஸ்ரீபராசத்தியம்மன் நோன்பு நேற்றேமே முடிவு பெற்றமை யால் இனி அப்பெண்மணிக்கு கலியாணகாள் நின்னயஞ் செய்பவே ண்டும் ஆகலால் நமது பட்டணத்திலுள்ள சாஸ்திரிமாரை வரும் படி திட்டம்செய்து அழைத்துவருவீர்கள் மந்திரிமார்களே.

சாஸ்திரி வசனம்.

சத்தியதரமகாராசனே எங்களை வரவழைத்த சேதியைதெரி விப்பீர்.

சத்தியதரன் வசனம்.

வாருங்களையா சாஸ்திரிகளே என்குமாரத்தி பத்மாவதியாகிய அருந்தவப் புதல்விக்கு கலியாணம் நடத்தவேண்டுமாதலால் நன் முகூர்த்தகாள் சொல்லும் சுவாமி

சாஸ்திரி-கவி.

சித்திரைதிங்களேழில் திகழ்சுக்கிரவாரங்காலே
உத்திரத்துடனேயாவும் வொத்திருக்கின்றதாலே
உத்தமமானகாளென் றுயிர்சயவரமமைத்தால்
நித்தியம்புவியின்மீது நீடுழிவாழ்வீர்மன்னு.

வசனம்

கேளும் சத்தியதரமகாராசனே இவ்வருஷம் சித்திரைமாதம் ஏழாந்தேதி சுக்கிரவாரம்காலையில் உத்திரநக்ஷத்திரம் ஒத்திருப்ப தால் நல்ல சுபதினமாகயிருக்கிறது ஆகையால் சுயவராட்டி. உன் குமாரத்தி பத்மாவதிக்கு திருக்கலியாணத்தை நடத்தினால் நீடுழி காலம் சுகமாக வாழ்ந்திருப்பாள் மகாராசனே.

சத்தியதரன்-வசனம்.

ஆ ஆ சந்தோஷம் சந்தோஷம் கேளுங்கள் மந்திரிமார்களே இந்த சாஸ்திரிகளுக்கு வேண்டிய வெகுமதிகளைத் தந்து அனுப்பு வீர் மந்திரி.

மந்திரி-வசனம்.

கேளும் மகாராசனே அப்படியேதந்து அனுப்பினேன் அரசே.

சத்தியதரன் வசனம்.

கானைய சித்திரைமாதம் ஏழாந்தேதி நமது குமாரத்திக்கு சுய வரமாகையால் அனபத்தாறுதேசத் தரசர்களுக்கும் திருமணப்பத் திரிகை எழுதவேண்டும். நமத கர்ணிகரை வரவழைப்பாய் மந்திரி.

மந்திரி வசனம்.

இதோ கர்ணிகரை அழைப்பித்தேன் மகாராசனே.

சத்தியதரன் அகவல்.

மகிதலம்புகழும் மன்னர்யாவர்க்கும்
தகைமைசேர்சத்திய தரன்வரைநிருபம்
யாதெனிலெந்தன் அருந்தவப்புதல்வி
மாதவம்தனில்மிகும் வளர்பத்மாவதிக்கு
சுயவரம்மிகழும் சுகர்தசித்திரையின்
ஜெயமிகுயேழாம் தேதிநன்னாளில்
காலியிலெனவும் கருதுமிவ்விடத்தில்
சாலவேஷடக்கும் தன்மையேதென்றால்
என்னருஞ்செல்வி இசைந்திடுங்கேள்விகள்
தன்னேயெயரிந்து தகும்பொருளுறைப்போர்
அவரேகணவ ரூகுவெனவும்
அவனியாளரசர் அரிந்திடுவீரே.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே இந்த கலியாண திருமுகப் பத்தி ரிகைக்கு மஞ்சள்காப்பிட்டு தூதுவரிடம்கொடுத்து அவுனி அன் பத்தாறுதேசத் தரசர்களுக்கும் கொடுக்கும்படியாக திட்டம்செய் தனுப்புவீர் மந்திரிமார்களே.

பொது வசனம்.

தூதுவர் திருபங்களேக் கொண்டுபோய் தெரிவிக்க அனபத் தாறுதேச ராசாக்களும்வந்து சுயவரச்சபையில் வீற்றிருக்க இப் பால் வீராணகரையாளும் வித்தியேசமகாராசனுக்கு காண்பிக்க வித்தியேசன் சொல்லுவது.

வித்தியேசன்-கவி.

சத்தியதரனளித்த தையல்பத்மாவதிக்கு
மெத்தவேவிவாகமென்ற விசேஷங்கேட்டகமிழ்ந்தேன்|

சத்தியசயவரத்தில் நாமுமேபோகவேண்டும்
வெத்திசேர் அமைச்சமாரே விரைவினில்புறப்படீரே.

வசனம்.

சத்தியதரனளித்த பத்மாவதிக்கு திருக்கலியாணமாகையால் மகாசந்தோஷமாகினேன் ஆகையால் நாம் அவசரச்சாலைக் கேகவேண்டும் புறப்படுங்கள் மந்திரிமார்களே.

வித்தசேசன்-தரு.

எப்படிதணிக்தசெல்லுவேன் ஈசனேயெந்தன்
சொற்படிசபதம் வெல்லுவேன்
முப்புரம்தணெயெரித்த ஒப்பிலாப்பரம்பொருளே
அப்பனேநீர்அமைத்திட்ட கற்பனேயேதா அறியேன்.(எப்)

எவ்விதக்கேழ்வியுஞரப்பாளோ சொல்லாதிருந்தால்
யேனினம்செய்தே நகைப்பாளோ
செவ்விதமுமைமணாளா தேவதேவனே
சித்தசன்தணெயெரித்தக் கந்தனேயேழைபங்காளா (எப்)

பொது வசனம்.

இப்படியாக அவுனி அன்பத்தியாறுதேச ராசாக்களும் பசார் பசாராய்வந்து சுயவரமண்டபத்தில் வந்து வீற்றிருக்கும்போது சத்தியதரன் மந்திரிகளைப்பார்த்து சொல்வது.

சத்தியதரன்-கவி.

அதிபதிதந்தையாரும் அழைப்பித்தசேதிகாண
துதியணிபனிகளோடி சுகிர்தமாமலர்கள்சூடி
சதிர்பெரும்சிவிகைமீது தாதிமாருகில்சூழ
மதிஞுதலெழிலாள்பத்மா வதியிதோவருகின்றாளே.

சத்தியதரன்-கவி.

தோழிகள்சொல்லக்கேளீர் சுயவரமண்டபத்தில்
வாழ்வுறுமன்னரெல்லாம் வந்திதோநிறைந்ததாலே
தாழ்விலாஞதுசெல்வி தணியலங்கரித்துசோற்ப
நாழிகைதனிலேயிங்கே கலமுடனழைத்துவாரீர்.

வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே சுயவரமண்டபத்திற்கு என் சுமாத்தியாகிய பத்மாவதியை அலங்காரஞ்செய்து சபைக்கு வரும்படி தாதிகளுக்கு ஆக்கியாபிப்பீர் மந்திரிகளே.

பத்மாவதி-தரு.

ஆதியிலெந்தனையே ஆயெம்மா
அன்னைவயிற்றி லணைவாய்
மாதம்பத்துமங்கே ஆயெம்மா
வனத்துப்புனிதனி லுதித்திடவே
செய்தலைவள்காண்டி ஆயெம்மா
சேயரும்பருவத்தில் கோய்ப்பெறவே
மெய்தனிலணுகாமல் ஆயெம்மா
மேன்மையாய்வளர்த்த என்தாயவளே
ஐந்தவயதுமுதல் ஆயெம்மா
அரியகல்விகளெல்லாம் தெரியுறவே
சிந்தைபதித்திடவும் ஆயெம்மா
திட்டமாய்சங்கர பட்டறெனும்
சிவசங்கரிதனையே ஆயெம்மா
நாம்சிந்தையில்தபுத்தியம் செய்திருப்போம். (ஆதி)

பத்மாவதி-தரு.

சரணம்சரணம் தந்தையாரே தந்தையாரே இந்த
சபைதனில்தெரிசனம் தரும்பெரியோரே
இதோதிருவடிவணங்கினேன்நேரே இதோநேரே வுங்கள்
சேயாமெத்தனுக்காசீர் புரிந்திடுவீரே. (சரு)

சத்தியதரன்-கவி.

செல்வியேஅன்பத்தாறு தேசமன்னவருமிங்கே
வல்லவிவுணேயேகோரி வந்தகாத்திருப்பதாலே
கல்வியின்திறமிதென்று காணுதற்காகநீயே
சொல்லுமுன்கேற்வியேதோ தொடுத்துரையுரைத்திடாயே.

வசனம்.

கேளாய் என்னருமைத் தவப்புதல்வியே இதோ அன்பத்தாறு தேசத்து மகுடமன்னர்களும் உனக்காகவேவந்து காத்துக்கொண்டிருக்கிறபடியால் கல்வியிற்சிறந்தவைகளே இன்னென்றறிவதாகவுன்னில் உறைக்கவேண்டிய கேள்வியெதுவோ அதைதெரிவிக்க இதுவே தருணமானதால் வெளியிடுவாயம்மா.

பத்மாவதி-கொச்சகம்

என்னருமைசேடியரே எண்டிசைக்குள்ளேபிருந்து
வர்னமுறவந்தமர்ந்த மாமகுடமன்னர்களின்
தன்னகரும்சீர்பலவும் தக்கபெயருமுதலாய்
இன்னதெனவேவகுத்து யேந்திழையேகூறுவாயே.

வசனம்.

என்னருமை தாதிமார்களே தேசத்தரசர்கள்வந்து சுயவரச் சபைக்கு வந்திருப்பதால் நான் தெரிந்துக்கொள்ளும்படியாக ராசாக்களுடைய பெயரும் அவர்பட்டணமும் தெரிவிப்பாய்.

தோழி-தரு.

கல்வியில்மிகுந்தராச — செல்வியேபத்மாவதியே
கோளம்மாசொல்வேன்
வல்லமைமிகுந்தமச்ச — தேசராசரிவரம்மா
அரிகுவாய்அம்மா — தெரிகுவாய்
சிங்கணர்வங்கணரிவர் — சினரிவர்பார்ப்பவர்
தேசாதிபர்பிறக்கி — யாதிபர்
அங்கசனென்னுமிவர் — வீராணகராண்டிடும்
வித்ரேசரே — மகாராசரே
சிந்துதேசமன்னரிவர் — சேரசோழபாண்டியரும்
மூவரேமகானு — பாவரே
குந்தளதேசத்தரிந்த — மன்னரிவரேயம்மா
பாஞ்சாலனும் — மகாவீரனும். (கல்)

பத்மாவதி-கவி.

எண்ணமண்புரிவதற்கு எண்டிசாமுகத்திருந்தும்
வின்னயமாய்வந்தமர்ந்த வேந்தர்வேந்தர்களேயுங்கள்
மனதைஓர்வழிப்படுத்தி வழங்குமென்கேள்விதன்னை
கனிவுடன்சற்றேகொஞ்சம் கவனிப்பீர்கவனிப்பீரே.

வசனம்.

என்னை மணஞ்செய்யவேண்டி இந்த சிருங்காரமான சுயவர மண்டபத்தில் வந்தமர்ந்திருக்கும் ராசராசாக்களே சற்று அங்கு மிங்கும் மனதைச்செலுத்தாமல் இதை கவனிப்பீர்கள்.

பத்மாவதி-விருத்தம்.

அகிலமதில்நிகரற்ற பொருள்தான்யாது
அப்பொருளின்ஓர்சிறிது நிலைமையீது
மகிழுமொறுமலர்கொள்ள வேண்டியந்த
மலர்யாதுஅம்மலரிணைவைத் திருப்போர்யாவர்
சுகிர்தமலர் அதனைக்கைக் கொள்வோர்யாவர்
சொல்லரிதுபதினுறைப்போர் எவராலும்
மகிமைபெறும்என்கணவர் அவரேயாவர்
மண்மாலையானவர்க்குச் சூட்டுவேனே

மகததேசாதிபதி வசனம்.

கேளும் மச்சதேசாதிபதியே இந்த பத்மாவதிசொன்ன கேள்விகளில் நிகரற்ற பொருளென்னுமென்ன மாணிக்கமா யிருக்கலாமா நீர் என்னயோசிக்கிறீர்.

மச்சதேசாதிபதி வசனம்.

ஒய் மகததேசாதிபதியே அதை மாணிக்கமென்றுதான் சொல்லுவது — — — அப்படியாயாருந்தாலும் அந்தப்பொருளைக்கொண்டு வாங்கக்கூடியிருந்தாலும் அதைக்கொண்டு வாங்கக்கூடிய புஷ்பம் என்ன புஷ்பமாகயிருக்கக்கூடும்.

சிந்தூராசன் வசனம்.

புஷ்பத்தைமாத்திரம் சொல்லப்போனீரே அவ்வளவு சிறந்த மலரைவிர்த்திசெய்து வைத்திருக்கப்பட்டவன் தான் யாரென்று கண்டுபிடிப்பது சொல்லும் மச்சதேசாதிபதியே.

மகததேசாதிபதி வசனம்.

ஒய் சிந்துதேசாதிபதியே அதுமாத்திரமா அதை வாங்குகிறவர்கள் யாரோ அவர்கள்தேவர்களோ மலர் பாரிசாதமலருக யிருக்கலாமா யாதோ.

மச்சராசன் வசனம்.

ஏதேது மகததேசாதிபதியே ஒன்றைப்பார்த்தால் ஒன்றும் பொருத்தமில்லை பெண்ணைப்பார்த்தால் அழகாகத்தா னிருக்கிறது என்செய்கிறது ஆச்சயாகத்தான் இருக்கிறது இருந்தால் இருக்கட்டும்.

சிந்தூராசன் வசனம்.

உமக்குமாத்திரமல்ல எல்லாருக்கும் அபேக்ஷைதான் இருக்கின்றது விவாகம்பண்ணுவதுதான் சுயவரத்திற்கு அழகு அதைவிட்டு இந்த சத்தியதரன் நியமித்தாரே இதற்கு தக்கவிடை யார்தான் சொல்லப்போகிறார்கள் இங்கொருவருங்கிடையாது.

வித்ரேசன்-விருத்தம்.

அகிலமதில்நிகரற்ற பொருள்தான்கல்வி
அப்பொருளின்அளவதனில் அரியக்காட்டி
மகிழ்மொருமலர்கொள்வோன நானேயந்த
மலர்பறைத்தோன் சத்தியதாமபனுகும்
சுகிர்தமிகும்அமலரோ நீதான்மாதே
சொல்லரிதுபதினுரைத்தேன் தடைதான்யாது
வகைபொருத்தியுரைத்த மொழிப்படிக்கே
மண்மாலைசூடுவாயே.

பத்மாவதி வசனம்.

ஸெஸிவா சம்போ வுமாபதியே இதோ நான் வித்தரேசமகாராசனு க்கே மாலைசூட்டுகிறேன் உமாபதி சிவ சம்போசங்கீரா.

மகதராசன் வசனம்.

ஒய்ஒய் பார்த்தீரோ மச்சதேசாதிபதியே சுண்ணாம்பிலிருப்பது சூடாகும் நாம் என்னமோ ஒடிஒடிப் பார்த்தோமே இந்த வித்தரேசன் புத்திக்கு எட்டின நமக்கு எட்டாமல் போய்விட்டதே.

மச்சராசன் வசனம்.

மகததேசாதிபதியே அப்படியல்ல குடுத்துவைத்திருந்தாலல்ல வோ குடுத்துவைத்திருக்கும் இந்தப்பெண் நமக்கென்றிருந்தாலல்ல வோ அதின்பொருள் நமக்குப்புலப்படும் இனி அதைப்பற்றி பிர யோசனம் என்ன?

சத்தியதரன் வசனம்.

வேதவேதியர்களே இதோ எனது குமாரத்தி வித்தரேசமகார சனுக்கு மாலைசூட்டியபடியால் இனிமற்ற திருமணச்சடங்குகளையும் நிறைவேற்றுங்கள்.

சத்தியதரன்-தரு.

மன்னவன்சத்தியதரன் சொன்னமொழிப்படிசெய்ய
மங்களவாத்தியங்கள் மீட்டினர் மிகும்
பொங்கமாயசானிக்கால் கரட்டினர்
நண்ணியபாலிகையுடன் வுன்னிதநீபங்களோடு
வண்ணமாய்ப்பூரண கும்பட்சமைத்தார் சுப
சின்னமாம்பலவகைகள் அமைத்தார்
பன்னியவித்தரேசனுக்கும் பாவையாம்பத்மாவதிக்கும்
பொன்னியேனலங்குவதை தீட்டினர் மாதர்
பன்னுருந்திருமஞ்சனம் ஆட்டினர்
சோபிதவேதியர்கள் அமைத்தேபலவிதசடங்கும்
தங்கமாய்வேதவேதியர் முகித்தார் நல்ல
கங்கணபிதாம்பரமும் வகுத்தார்
அந்தணர்முதலாயங் கமர்ந்திடும்பெரியோர்கட்கும்
முந்துராமங்கிலிய மைதீட்டினர் தொட்டு
சிந்தைகளித்தேதயவரும் வாழ்த்தினர்
சுந்தரிபத்மாவதிக்கும் அந்தவித்தரேசன்கையால்
சொந்தமாய்திருமங்கிலியம் சூட்டினர் மாதின்
இந்துமுதலில்வெண்ணீர் தீட்டினர்
மாதர்களாலாத்தியேந்தி சுபசோபன
மங்களாலிகன்தனைப் பாடினர் வண்மேர்

தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலகம்

பத்மாவதி மாலையிடு நாடகம்.

இங்கிதமாய்மனமகிழ்ந்து
சிதரனுடனேதிருமாதென
சேவைபுரிந்தேவலமாய்
யாவரும்மகிழ்ந்தகூத்தை

மீறினர் இருவரும்
அருந்தவத்தினைச்
மேலினர்பெரியோர்
தாவினர்.(மன்)

வித்ரேசன்-சவி.

திருந்தாதகிரிகையாவும் செவ்வையாமுடித்ததென்று
இருந்திடமனதேஅன்றி என்னுடன்வரவிசைந்தாய்
வருந்தமுன்தந்தைதாயை வணங்கியுத்திரவேகொண்டு
பொருந்தவேவருவாய்மாதே போவோம்நாம்பதிக்குத்தானே.

வசனம்.

கேளாய் பெண்ணே பத்மாவதி கலியாணச்சடங்குகள் யாவும் முடிவுபெற்றபடியால் இதோ யான் என்பட்டணம்போக பிராயணசித்தமாகினேன் நீ இங்கனே இருக்கவேண்டுமானால் இருப்பாய் அல்லது என்னுடன் வரவேண்டுமென்றால் இப்போதே உன் தாய் தந்தையிடம் விடைபெற்றுக் கொண்டுவருவாய் சீக்கிரம் சொல்ல வேண்டும்.

பத்மாவதி-வசனம்.

சேளும் என்பிராணநாயகா மணியைவிட்டு ஒளியும் மரத்தை விட்டு நிழலும் பிரிந்து இருக்குமா மதனையொத்த நாதனைப்பிரிந்து மாதர் யிருப்பது அழகாகுமா சற்றிருங்கள் என் தாய்தந்தையரிடம் விடைபெற்று இதோ வருகிறேன் பின்புநமது பட்டணம்போய்ச்சேருவோம் பிராணபதியே.

பத்மாவதி-தரு.

தந்தையரேசருணம்இதோ
தாயைச்சென்றுவாரேன்
மந்தனுள்யிருந்தாலும்
சொந்தமில்லையென்ப

எந்தன்மனைருடன்
விடைதந்தருள்வீர்சருணம்
தந்தைதாயரண்மனை
தரிதேனரிந்தேதினை (தந்)

சத்தியதரன்-தரு.

அருமைசிகாமணியே
திருமைவராதினியே அம்மா
அருமைமகனவனே அன்னை
ஆமெனத்தெரிந்துக்கொள்

அழாதேஎன்கண்மணியே
சென்றுவருவாய்நீயே
தந்தைகுருதெய்வம்
அதுவேபேரின்பமாகும். (அரு)

வித்ரேசன் வசனம்.

சருணம் சருணம் மாமா தங்களுக்கு நமஸ்காரம் நாங்கள்போய் வருகிறோம்.

சத்தியதரன் கவி.

மாட்சிமைமிகுத்தயென்தன் மருகன்வித்தேசபூபா
வாட்சியுனக்கேயென்பெண் மாணிக்கத்தனையளித்தேம்
தாஷிகளென்செய்தாலும் சகிப்பதன்பாரமித்த
காஷிசீதனங்கள்கொண்டே களிப்புடன்சென்றுவாரீர்.

வசனம்.

மஹாராசனே நீர் எனக்குமருமகனை நான்செய்த பாக்கியமே பாக்கியம் நான் அருமையாக பாதுகாத்துவந்த இப்பெண்மாணிக் கத்தை உனக்களித்தேன் எண்ணறகற்று யெழுத்தா வாசித்தாலும் பெண்புத்தியேபேதையென்பார் அதைப்போல் இக்கண்மணி அரியா தாகையால் குற்றஞ்செய்தாலும் பொருத்தாள்வது உமதுகடமை யாகும் இதோ யென்னுல் கொடுக்கக்கூடிய யானேசேனை முதலிய சீதனங்களேயும் கைப்பற்றிக்கொண்டு மஹாசமேட்சத்துடன் உங் கள் பட்டணம்சேர்ந்து சுகமாகவாழ்க்கடவது போய்வருவீர் மகா ராசனே.

வித்திரேசன்-தரு.

செயம்செயமெனகடப்போம் மந்திரிகளேநாம் செயம்செயம்
செயம்செயமெனப்பேரி முரசுமுழங்கிடவும்
திறமிகுகட்டியர்கள்விருது வழங்கிடவும். (செ)

வித்திரேசன்-கவி.

நாட்டியமணமுடித்து நகர்வந்துசேர்ந்தோமெந்தன்
தாஷ்டீகவமச்சமாரே சமுத்தரேயேழுசுற்று
கோட்டையுங்கோட்டைக்குள்ளே கொடுஞ்சரைச்சாலையொன்றும்
தேட்டமாய்முடித்துவைப்பீர் சேதியின்தெரிவிப்பேனே.

வசனம்.

வல்லமையிலும் புத்திசாதுர்யத்திலும் சிறந்த மந்திரிமார்களே இதோ கலியாணமுடிந்து பட்டணம்வந்துசேர்ந்தோம் இங்கே நாம் செய்யவேண்டிய சூட்சமொன்றிருக்கின்றது அதைபின்னல் வுங்க ளுக்குத் தெரிவிக்கிறேன் ஆனதால நமது பட்டணத்திற்கு வடபுற த்தில் யேழுசுத்துகோட்டையும் அதில் கணக்கரித்த காவலர்களுங் கூடிய இடமும் அதின்மத்தியில் வலுவான சூஸ்திரக்கதவமை ந்த ஓரே வாசற்படியும் ஓரேசாளரமுள்ளதாக சிறச்சாலையொன் றும் கூடியசீக்கிரத்திற் கட்டிமுடித்து எனக்குத்தெரிவிப்பீர் மந்திரி மார்களே.

மந்திரி-வசனம்.

நல்லது இதோ அவ்வாறே செய்தமுடித்தோம் மகாராசனே.

விக்ரசேன் வசனம்.

சந்தோஷம் சந்தோஷம் சேர்வைக்காரா அந்தபத்மாவதியென் பவளை இங்கேவரச்செய்வீர் சீக்கிரம்.

பத்மாவதி-தரு.

வதுவைசெய்தாளாய்
அதிமன்மதனெனுமென்மலர்
தியிங்கழைத்திடுங்காரியம்
தியோடுத்தன்பதாமரை

ஒருவார்த்தைபுகலாத
வாளாவெழிற்றேளா
தானேஎந்தன்கோனே
தொழுதேனருள்புரிவீர்.

வசனம்.

மலையைப்போன்ற தோள்களையும் மன்மதனைநிகர்த்த பேரழகு கையும்வாய்த்த என்பிராணபதியே தேவரீர் பாதாரவிந்தங்களுக்கு அடியாள் அநேகவர்தனம் கலியாணமாகி வந்தகாளாய் அந்தப்புரம் வராமல் என்முகத்தையும் பேரெடுத்துப்பாராமல் அன்பாக ஒரு வார்த்தையுங்கூறுமல் இருந்த தேவரீர் இன்றையதினம் இவ்வனம் வரவழைத்த விபரம் தெரிவிப்பீர்வேகதே.

விக்ரசேன்-கவி.

அடங்காதபிடாரிகீலி அகங்காரியுன்னைப்போலே
தடங்காணுமெற்றலோகந் தன்னிலுமரியேனந்த
திடங்காணவேண்டியல்லோ செய்தேனுந்தனிவிவாகம்
இடங்காணசிறைக்குள்செல்வாய் எனைசிறையிடுவாய்மாதே.

விக்திரேசன்-வசனம்.

அடி அங்காரி வுன்னைப்போல் அடங்காப்பிடாரியை நான் யெங்குங்கண்டதில்லை அடிபடுகீலி எனக்கு மனைவியாகபாவித்து உன்னைக் கலியாணஞ்செய்தேனென்றெண்ணுதே மூன்பு நந்தவனத்தில் நான் இட்ட சபதப்படியே விவாகஞ்செய்தேன் சிறைச்சாலையுங் கட்டி முடிவாகிவிட்டது கல்லதி அதற்குள்ளோயிருந்து நீ இட்ட சபதம்போல் யென்னைச்சிறைச்சாலையில்வைப்பாய் சீக்கிரம்போடி.

பத்மா-தரு.

அரசேயென்னைசிரைவைத்திடில்
வருவீர்மணம்புரிவீரென்தன்
வர்மமாகஅதை
மருகவுமினிதடை

ஆமோகலக்தாமோ
மொழியேபெரும்பிழையோ
மனதிலெண்ணுதீர்
புரிகுவேன்வாரீர். (அ)

விக்ரசேன்-தரு.

சிறையில்வைக்காதுன்னைவிடுவேனே
தேவியென்றுனைநினைந்

வருமமென்னடிமெத்த மெத்தகோபிதனம்படைத்த
மட்டிமட்டிவிணப்போலுண்டோடி துஷ்டி. (சிரை)

பத்மாவதி-தரு.

கோபம்கொள்ளவேண்டாம்தய கூறும்கிருபைபாரும்
தாபம்கொள்ளில்பாபம்பழி சாறும்துன்பம்சேரும்
சரசமாக எனதருகினில்வாரும்
பரிவுடனேபணிக் இனிமையல்தீரும். (கோ)

வித்ரேசன்-தரு.

சரசவார்த்தையால்மலைத்திடுவனே இந்த
சகம்புறண்டிட்டாலும்வண்ணித் தொடுவனே
தடைதட்டிமார்தட்டிசரியாய்சபத மிட்ட
துஷ்டிதுஷ்டிகெலித்தாலேநீயே கெட்டி (சர)

வித்ரேசன்-கவி.

குடத்திலேவாளையுற்றல் குளத்திலெத்தனைதான்வாளே
அடுத்திட்டாரென்றுசொல்லா ரதைப்போல்யெத்தனையெதிர்த்து
சடுத்தம்செய்திடும்இம்மாதின் சமர்த்தைனுனரிந்திடாமல்
விடுத்திட்டேன்தடுத்தவார்த்தை விளம்பாதீர்அமைச்சமாரே.

வசனம்.

ஒருகுடத்து சலத்தில் ஒருவாளைமீன் இருக்குமாயின் குளத்தில் எத்தனைவாளைமீன் இருக்கிறது அரசனென்றும் கிஞ்சிற்றும் மதிக்காமல் எதிர்த்து மார்தட்டி சபதங்கூறிய சாமார்த்தியத்தை பார்க்காமல் திருமூர்த்தி தேவர்வந்து தடுத்தாலும் விடுவேனென்று எண்ணுதீர்கள் இனி அதைப்பற்றி ஒருவார்த்தையும் சொல்லாதீர்கள் மந்திரிமார்களே.

பத்மாவதி-கர்தார்த்தம்.

நாதனேமாலைசூட்டார் நாயகர்நீயேயென்றும்
நீதியைமெடுத்துரைத்தேன் நீறேயென்மேற்கோபித்து
வாதித்தசபதமிட்டீர் வார்த்தைக்குநானும்சொன்னேன்
வேதையா யிதினுற்கோபம்.

தரு.

வேண்டாம்சுவாமியென்மேற்கோபம் வேண்டாம்சுவாமி
வேண்டாமென்மேல்வர்வம் வேண்டாமென்றிருவரும்
விதவிதலீலைகள்புரிகுவோம் வாரும்வாரும். (வே)

விதூரேசன்-கந்தர்த்தம்.

அல்லகடலுலகிற்றூனே அரைக்காசுதனக்குமுன்னம்
சூலமானமாயிருந்தால் கொடுத்தாலும்வருவதுண்டோ
வலுவுடனெதிர்த்துப்பேசி வாதித்தீலியுன்னை
கலியவே சிறைவைக்காமல்

தரு.

காணேவிட்டிடுவேன்சீசி. கடவடிமுன்னே
வீணுய்க்கெஞ்சாதேயுன்னை கானறிவேன்மிகவும்
கேடுகாலிவன்மனக்கெரு வத்தையரிருவேன். (கா)

பத்மா-தரு.

என்னசெய்வேன்கானினி யேதுசெய்வேன்இதை
யார்க்குரைப்பேன் எந்தன்பாக்கியமிதோ
மன்னருடன்கூடி வாழுங்காலம்யென்னை
வன்சிரையில்லைக்க நீதிதானேதெய்வமே. (என்)

விதூரேசன்-தரு.

நீதியைநான்மெத்தஅரிவண்டி அன்றுநீசொன்ன
வார்த்தைகள் மறவண்டி
தோதகிநீகாட்டும்பாசாங்குக் கிசையேண்டி
துஷ்டிவுக்தனைக்கையரல் தொடவும்சம்மதியண்டி. (நீதி)

பத்மாவதி-தரு.

பூர்க்குங்காலம்பூர்த்து காய்க்குங்காலம்கல்ல
புத்திரரைப்பெற்று வாழுங்காலம்இது
ஆற்கடுக்குமிந்த அவனிமீதேயென்னை
அருஞ்சிரைக்குள்வைக்க நீதிதானேதெய்வமே (பூர்)

வசனம்

அடிநீவி புலம்பினது போதும்போறும் சிரைச்சாலைக்குள் போ வாயடி துஷ்டி.

விதூரேசன்-கவி.

கடினமேமிகுத்தகோட்டைக் காவல்காரர்களேகேளீர்
திடமிகுமிவளைத்தானே சிறைச்சாலைக்குள்ளடைத்தேன்
அடிமைபோல்நிதமோர்வேளை அன்னம்சாளரத்தாலீந்து
படிமிசைக்கடினமாகப் பாதுகார்த்திருந்திடீரே.

வசனம்.

கேளுங்கள்டா காவலர்களே இதோயிவளை இச்சிறைச்சாலைக் குள்வைத்து பூட்டிட்டு எனது ராசமுத்திரையைப் போட்டு திறவு

கோல் கையில்கொண்டேன் இன்றுமுதல் தாதிகளால் இங்கு கொ
ண்டுவரும் வெண்ணீர்கலர்த்த சாதத்தை நித்தியம் ஒருவேளை அதோ
உயரத்திலிருக்கும் சாளரத்தின்வழியாகதொடுத்து இரவுபகல் டிகா
சாக்கிரதையாக காவல்புரிக்துவருவீர்கள் நான் கஸ்துவரும்வேளை
யில் இஞ்சிற்றும் அசாக்கிரதையைக்கண்டால் தப்பாமல் சிரசைசே
தம்செய்வேன் சாக்கிரதை சாக்கிரதை.

காவலர்கள் வசனம்.

அரசே தங்கள் கட்டளையைப்போல் காவல்செய்துவருகிறோம் மகாராசனே.

பத்மாவதி-தரு.

ஐயோயிதுஎந்தன்தலைவிதியோ ஆரிட்டசாபமோகானறியேன்
தெய்வச்செயலிதுவோயென்னு தீவினைசெய்தேனோபாகினன்
கூடும்புருஷன்பெண்சாதியை கூடாவிதங்களுறைத்தேனோ
நாடிக்குடும்பங்கள் தன்னையே காணேகலைத்திடலானேனே
நேறும்விலங்கினம்ஆண்பெண்ணே நீக்கிதனித்தனியாக்கினேனோ
சாறும்பறவைகள் ஆண்பெண்ணே தனித்திடக்காட்டிலடைத்தேனோ

பத்மாவதி-வேறு-தரு.

இக்தவேளைவக்துகாரம்மா பராசத்திதாயே
யேழைநானுனக்குமைபாரம்மா பராசத்திதாயே யேழை
தந்தைதாய்குருதெய்வம்நீயன்றே பராசத்திதாயே
தருணமிதோகருணைநீசெய்குவாய் பராசத்திதாயே தருண
அயணஅரியைஅரனையுமளிப்பாய் பராசத்திதாயேநீ
அவர்கள்மணவியாகவும்சகிப்பாய் பராசத்திதாயே அவர்கள்
தயவிலுன்புகழைறைக்கவும்போமே பராசத்திதாயே
தாருவுன்கிருபைபாரும்யாருமே பராசத்திதாயே தாருமுன்
கனகசபைதனில்நடனவல்லியே பராசத்திதாயே
காரும்கிருபைகண்பாரும்கலியே பராசத்திதாயே காரும்
னைமுமுன்பதம்நினையுமன்பர்க்கு பராசத்திதாயே
செகத்திலோர்குறைவருத்தல்நீதியோ பராசத்திதாயே செக

பொது வசனம்.

பத்மாவதியானது சிறைச்சாலையிலிருந்து பராசத்தியம்மனை
தோத்திரஞ்செய்து துயரப்பட்டுக்கொண்டிருக்கையில் அப்போது
அம்மன்வருவது.

ஸ்ரீபராசத்தி-தசி

மாதுதான்அகேகநாள்கள் மனதில்வைராக்கியத்தோடும்
நீதமாயன்னுகாரம் நித்திரைபலவும்நீங்கி

சாதனபுரிந்திருக்க தநியிதென்றளமிதங்கி
பாதகாத்திடவேஆதி பராசத்திவருகின்றாளே.

ஸ்ரீபராசத்தி-தரு.

ஆதிபராசத்தி
மாதவம்புரிந்திடும்
அகிலபுவன
மகிலமயுடனே
தேரன்தனக்
சக்திரசேகரன்தமது
சோதரஜமுகனே
வீரபத்திரனே
வாலிமனோன்மணி
மங்களகல்லியாணி
மகிடவர்த்தினி
சுகமளித்திடும்
காலாகாலி
சிவகாமிதனமும்
கௌரிமுக்கண்ணி
புவனசுந்தரி
யிதோவாரார்ள் கல்ல
பத்மாவதிப்பெண்ணோர்
சாராசரத்தையும்
பெருதமற்றிடும் (ஆதி)
கருமைதங்கை
வாமபாகம்வளர்ங்கை
மூருகனே
வுதவுமெந்தனே (ஆதி)
கோமாரிதிகழ்
சிவசங்கரிஓங்காரி
குமரியாரணி
விமலீநாரணி (ஆதி)
நீலிதிரிசூலி
பெரியசாமிக்கனுகூலி
சாம்பவிதிரி
யம்தரியெனும் (ஆதி)

பத்மாவதி-தேவாரம்.

அத்தனுர்வாமபாகத் தமர்ந்திடுமயிலேயாவும்
பெத்தமாதாவேமுன்னுல் பேசரும்புகழினுளே
னத்தனிமாதவங்கள் யியற்றினுங்காண்பதற்கே
சத்தியேயென்முன்வந்த தாயேநின்ருள்கள்போற்றி.

வசனம்.

அத்தனுகிய சிவபெருமானுடைய வாமபாகத்திலமர்ந்த யென் னைப்பெற்ற மாதாவே எத்தனைகோடி தபங்கள்செய்யினும் காணு தற்கரிதான ஸ்ரீபராசத்திதாயே உன்திருவடிக்கு அடியேன் வந்த னம் வந்தனம்தாயே.

பராசத்தி-கவி.

எண்ணியேருறித்துகாளும் எழில்வரம்புரிந்தெடுத்த
கண்ணியேவாழிவாழி கலங்கலங்கவுமுனக்குவந்த
இன்னிலத்தென்னைவேண்டி இத்தியழைத்தாய்நோன்பு
பன்னுவாயதனுனானே பழுதிலாநீர்ப்பேன்யானே.

வசனம்.

பால்யவயதமுதலாக எனக்கு அடிமையுண்டுவந்த பத்மாவதி யே நீபுத்திரசம்பத்துடனே சுபமங்களவதியாக நீழே வாழிவாழி இப்போது வுனக்குநேர்ந்த தன்பம்யாது என்னைக்குறித்து அன்ன ஆகாமன்றி வைராக்கியத்தோடு கடினமான தவம்புரிந்த காரண மென்ன தெரிவிப்பாய் ராசகுமாரத்தியே.

பத்மாவதி தோத்திரம்.

தாயே லோகநாயகி, லோகவுத்தமி, லோகாரணி, லோகபரி பூரணி, லோகமாதாவே, சகல அண்டரண்டசராசரங்களையும் அளித்து காக்கும் பராசத்தியே என்னன்னையே ஆண்ம கோடிகள் தோறும் எள்ளுக்குள் எண்ணெயைப்போல் நிறைந்து விளங்கும் தேவரீர் அறியாதவிஷயமுளதோ ஆனல் நடந்ததை இதோ விண் ணப்பம் செய்கிறேன்தாயே.

பராசத்தி-தரு.

அருஞ்சிறைக்குள்ளிருந்து வருந்திதபம்புரிந்த
ராசசெல்வியே
உனக்கு-அபயமளித்தேனிதோ சுகமடைவாயஞ்சாதே
ராசசெல்வியே
கெருங்குமுன்தந்தையால் சுறங்கமொன்றியற்றிடும்
ராசசெல்வியே
அனலில்நீயங்கேசென் றுபாயம்புரியவேண்டும்
ராசசெல்வியே
கூத்தாடுங்குறத்தியாய் மாத்திவருவெடுத்து
ராசசெல்வியே
அவன்முன்-குலவிநடினம்செய்வாய் அணையச்செய்குவனுன்னை
ராசசெல்வியே
பிறகு-மைத்தனுடித்திடவும் வலுவில்மிகுத்திடவும்
ராசசெல்வியே
இப்போ-வருந்துமுன்கணவனை சிறைக்குள்படித்திடவும்
ராசசெல்வியே
சங்கேதமில்லாமித அந்தப்படியேசெய்வேன்
ராசசெல்வியே
உந்தன்-சபதங்கள்நிறைவேறும் அபயமடைந்திடாதே
ராசசெல்வியே. (அருஞ்)

பராசத்தி வசனம்.

கேளுமம்மா பத்மாவதியே இதனை நானே நேரில் போய்முடி ப்பேன்உனக்கு பழியில்லாமல்போகும் இப்போது சொல்லிவந்த

விஷயங்களெல்லாம் நீனைத்தபோது அரூபியாகவந்து உனது சப தத்தை முடித்தவைப்பேன் இனி அஞ்சவேண்டாம் இதோ கிரு ரீரும் மஞ்சள் குங்குமமும் அளித்தேன் வாழிவாழி நான்சென்று வருகிறேன் ராசகுமாரத்தியே.

பத்மாவதி-வசனம்.

இந்த சிறைச்சாலை காவலர்க்கும் ஓ அநிகார அண்ணு உனது பெண்சாதியை சிறுநங்கையைப்போலும் சற்றுதேரம் இந்த சன்னலுக்குதேரில் வந்து போகச்சொல்லும் அண்ணு.

சிறுநங்கை வசனம்.

ஏனம்மா என்னை வரும்படிபோருட்டாகச் சொன்னாய்.

பத்மாவதி வசனம்.

சிறை சிறையிருந்தபோது தேருதலைச்சொல்ல திரிசடையிரு ந்ததைப்போல் எனக்கு நீதான்தெதி வேறொருவருமில்லை அம்மா இதோ இந்த கண்டசரத்தைப் பெற்றுக்கொள்வாய் காளைக்குவரும் போது ரகசியமாக ஒரு ஓலையும் எழுத்தாணியும் கொண்டுவருவாய் போய்வாரும்.

சிறுநங்கை வசனம்.

இதோ ஒரு ஓலையும் எழுத்தாணியும் கொண்டு வந்தேனம்மா அரசியே.

பத்மாவதி வசனம்.

இதோ நிருபம் எழுதினேன் அதற்கு முத்திரையும்வைத்தேன் இதைக்கொண்டுபோய் சாலபதிபுரம் சென்று என் தந்தையிடம் கொடுத்துவருவாய்.

சிறுநங்கை வசனம்.

சருணம் சருணமையா மகாராசனே இத்தாரும் இத்தாரும் நிரு பம் அரசே.

சத்தியதரன் வசனம்.

ஆஆ எனதருமாரத்தி அனுப்பினதா கொண்டுவருவாய் என் னவிசேஷம் பார்ப்போம்.

சத்தியதரன்-கவி.

ஐயையோமகளேவுண்ணை அருமையாய்வளர்த்தெடுத்து
தையலேவுன்னையானும் சண்டாளன் தனக்குமீந்தேன்
பையவேசிறைக்குள்ளீயும் பாதவித்திருக்கவர்ச்சே
னையுதேளன தெஞ்சம் நானிதம்மென்னசெய்வேன்.

சத்தியதரன் தரு.

அரிதாய்சபம்புரிந்து மகளேவுனைப்பயின்று என்
அங்கப்பூரித்திருந்தேன் என்மகளே இப்போ
அனியாயமாகவேகொடுஞ் சிறையில்வைத்தானெனவே என்
ஆவித்துடிக்கிறதே என்கண்மணியே
திருமாதினைவளர்த்து பலகல்வியுங்கற்பித்து
சிந்தைகளித்திருந்தேன் என்மகளே
சிறைச்சாலைக்குள்ளிருக்கும் செய்திதனையறிந்துஎன்
திரேகம்துடிக்கின்றதே என்மகளே-கான்
கையிற்கிளிவளர்த்து பூனைக்கிறைகொடுத்து
கதைபோல்வினைவளர்த்து என்கண்மணியே இந்த
வையகத்தன்னிலேசன் மார்க்கமறிந்திடாத
மாபாவிக்குன்னைத்தந்தேன் என்கண்மணியே அரிதாய்

சத்தியதரன் வசனம்.

ஆகா எனதருமைக்குமாரத்தியின் அருமையறியாது இப்படிசெய்த கொடியவனை லேசில்விடுவேனை விடுவேனை கல்லதாகட்டும்.

சத்தி-தரு.

என்மகள்தனைச்சிறையில் இட்டவித்திரேசன்றனை
இன்றயத்தினமேகுரையடுவேன் அவனைக்
கொண்டுவந்துசிறைக்குள் போடுவேன்
தன்மையிதென்றறியாத தன்மதியுள்ளோனவனை
சக்கைசக்கையாய்க்கனையால் வாட்டுவேன்
ரத்தம்கக்கவேசெக்கினி லிட்டாட்டுவேன்
இந்திரதேவாதியர்கள் விந்தையாயவனுக்கு
வந்தெதிர்த்தபோதும் கனைதாக்குவேன் அவனை
சிந்துசிந்தாகவேஅத மாக்குவேன்
மந்திரிபிரதானிகளே மூர்த்தம்படையாவும்
வந்துகூடும்படிபறை சாத்துவீர் இப்போ
பந்திபந்தியாய்தனத்தைக் கூட்டுவீர். (என்)

மந்திரி-வசனம்.

அரசே தாங்கள் பட்டையெடுத்துப்போவது யுக்தமல்ல நிருபத்தில் எழுதியிருப்பதுபோல் செய்துமுடிப்பது கலமாக யிருப்பது அரசே.

சத்தியதரன்-வசனம்.

நீதியிற்றோர்ந்த சாதுர்யமந்திரி நீசொல்வதும் வாஸ்தவமே நிருபத்தில் எழுதியிருப்பதைப்போல் செய்துமுடித்து நமதருமைக்குமாரத்தி

யை இங்கேவரவழைத்து அதின்பிறகு நடப்பதையோசிப்போம் நமது பட்டணத்திலுள்ள சிப்பிசாஸ்திரிகளை வரவழையும் மந்திரி.

மந்திரி வசனம்.

அரசே யிதோ சிப்பிசாஸ்திரிகளை அழைப்பித்தேன்.

சிப்பி வசனம்.

சருணம் சருணம் மகாராசனே எங்களை அழைப்பித்தவிபரம் சொல்வீர்.

சத்தியதரன்-தரு.

அற்புதமிருந்த சிப்பிசாஸ்திரிகளே நமதுசிங்காரவனத்திலிருக்கும் மாளிகையிலிருந்து வீராணகரத்திற்கு வெளியில் கட்டியிருக்கும் கிறைச்சாலைவரைக்கும் பாதாளசொரங்கம் ஒன்று கூடியசீக்கிரத்தில் காலாளும்பல்லக்கும் நடமாடக்கூடியதாக கட்டிமுடித்து பதில்சொல்லுங்கள் சிப்பிசாஸ்திரிகளே.

சிப்பி வசனம்.

மகாராசனே அப்படியே தங்கள் உத்திரவின்படி சுரங்கம்வெட்டினேம் மகாராசனே.

சத்தியதரன் வசனம்.

அடிதாதி யுத்வாகினி நீ இந்த பாதாளவழியேசென்று எனது அருமைக்கண்மணியாகிய பத்மாவதியை பல்லக்கின்மேல் வைத்து வருவாய்.

யுத்வாகினி வசனம்.

கல்லது அவ்வாறேசென்று அழைத்துவருகிறேன் அரசனே.

யுத்வாகினி வசனம்.

அகோவாரும் எங்கள் அரசியாகியபத்மாவதியே உனக்கிந்த கடுஞ்சிறைநேர்ந்த காரணம்யாதி தெரியச்சொல்வாய்.

பத்மாவதி வசனம்.

அடியுத்வாகினி மெதுவாகப்பேசுவாய் வெளியிலிருக்கும் காவற்காரர்களுக்கு தெரிந்துவிடப்போகிறது சுந்தவனத்தில்நேர்ந்த சபதத்தால்நேர்ந்தகெதி யிதுவாகும் நானென்செய்வேன் யுத்வாகினி.

யுத்வாகினி வசனம்.

அம்மா தங்கள் தகப்பனார் உம்மை அழைத்துவரச் சொன்னார் வருவாய்.

பத்மாவதி வசனம்.

ஆனல் இத்தப்பல்லக்கின்பேரில் ஏறிப்போலாம் வருவாயம்மா.

சத்தியதரன் வசனம்.

அம்மா என் அருந்தவப்புதல்வியே உன்னைப் பார்க்கும்போது என்வயர் பத்தியெறிறது என்செய்வேன் என்செல்வமே.

பத்மாவதி ஜம்பை-தரு.

மாதபத்தினிலளித்து என்னை வளர்த்தருமைகல்வியெல்லாம்
சாதனஞ்செய்திடுமென்தன் தந்தையரேசருணம்

ஷி சத்தியதரன்-தரு.

மாதவத்தினுலளித்து வளர்த்தமுத்தனைச்சிறைக்குள்
வாதனைசெய்தடைத்திடிலோ மகளேகண்மணியே

பத்மாவதி-தரு

சிறையிலடைத்திட்டாலும் தழுவியணைந்திட்டாலும்
புருஷருக்கல்லோமனைவி பொருப்பனைத்துமென்தா

சத்தியதரன்-தரு.

ஆனலுனைசிறைக்குள் அனுப்பிடுங்கொடியவனை
நானேசென்றமர்புரிந்து கலியவைத்திடுவேன்

பத்மாவதி-கலி.

என்தந்தையேஎன்மணுளர் தனைமாய்க்கவல்லேபிங்கு
வந்தனன்அவரைநானே வசப்படுத்திடலோயிங்கேர்
சுந்திரம்செய்யவேண்டும் சங்கரப்பட்டனென்னும்
எந்தனசற்குருவைதாமே இங்குமழைப்பிப்பீரே.

வசனம்.

கேளுந் தந்தையே நான் தடுத்துரைத்தேனென்று கோபம்வேண்டாம் இதோ தங்கள் திருவடிக்கு அகேகமஸ்காரம் நான் இவ்விடம் வந்தவிஷயம் என்பத்தாவைக் கொல்வதற்காகவல்ல அவர் கோபத்தை தணிவுசெய்து வசப்படுத்துவதற்காக இங்கு வேதாந்திரங்களைச் செய்யவந்தேன் அதைப்பிறகு தேவரீரும்பார்த்து சந்தோஷமடையப்போகீர் எனது குருவாகிய சங்கரப்பட்டரை வரவழைப்பீர் தந்தையே.

சத்தியதரன் வசனம்.

அடாமந்திரி எனது குருவாகிய சங்கரப்பட்டரை வரவழைத்து வாரும்.

சங்கரபட்டர்-கவி.

கலிக்கியாணமிகவுந்தோர்ந்தக் கன்னியர்க்கருணையாளர்
சொலிக்குமுப்புரிநூலக்கம் தூயவெண்ணீரணிக்து
நிலிக்குமபூங்காவிபூண்டு நிருபனேக்காணவேண்டி
தலத்தில்கல்வுபாத்தியாயர் சங்கரபட்டர்வாழ்வார்.

சங்கரபட்டர்-தரு.

சிவசங்கரசிவசங்கர சிவசங்கரசிவமே
சிவனேசங்கரனேநன் கருள்யன்பரனே(சிவ)

ஜனகாதிபரெதிர்சிற்சபை தனிலாடியபாதா
ஜகனாதனேதிகழ்போதனே னருளீதனேசதுர்வேதனே(சிவ)

இனியேயென்றமுன்னடியாடுடனெனையாண்டருள்புரிவாய்
ஈசாபரமேசாசாசா சர்வேசாசிவ(சிவ)

நேமியபிரமிமகிழ் வாமிபெரியசாமி
நிதமுக்துதிபதியேகிருபா நிதியேயேகதியே(சிவ)

பத்மாவதி-தரு

ஆகிமாமரையோதுஞ்சிவகுரு காதனேவுக்தன்கண்மலராமிகு
பாதமேபணிக்தேறடியாள்தனே பாதகார்ப்பதன்பாரமென்னியனே

சங்கரபட்டர்-கவி

என்னிடத்தரியகலவி யாவையுமூணர்ந்தராஜ
கன்னியேவுனக்குவந்த கலக்கமெதினுலந்த
இன்னலுற்றிருக்கின்றின் எனையழைத்திட்டதேனே
வின்னமாங்குயிலேயென்கண் மணியேயிங்குறைத்திடாயே.

வசனம்.

அம்மா கல்வியிற்சிறந்த பத்மாவதியே வாடிப்போன கன்மல ரைப்போலே உனதிரேகம் இப்படி இளைத்து உருவமாறியிருக்கவே ண்டிய காரணமென்ன உனக்குவந்த இக்கட்டியாது உமது பிதாவி னல் என்னை இங்கு அழைத்தவிபரம் என்ன விளங்க வுரைப்பாய் என்கண்மணியாகிய மானிக்கம்மை.

பத்மாவதி அகவல்.

இன்னிலத்தோன்றும் இசைந்தயென்குருவே
மன்னுவிராணமாமகராளும்
வேந்தர்சுந்தவனத்தில் விரைந்தெனைக்கண்டு
காந்தர்வமாகக்கலவி செய்தவர்க்கே

சாற்றவுமடியாள் தடுத்துரைத்தனனால்
சீற்றங்கொண்டுன்னே திருமணஞ்செய்து
நிறைவைப்பேனென்று செப்பினைரதுபோல்
அருஞ்நிறைவைத்தார் அன்றுனுறைத்த
பந்தியம்போலே பதினீக்கூடியே
மைந்தனைப்பெறவென் மனதினிற்குறித்தேன்
தேவரீர்தாமே திருவுளமிசைந்து
பூமியில்நட்டுவன் போதுமாரி
அந்தவிராணத் தரசன்பால்சென்று
தந்திரமதாய்க்குற தாசிகள்கூட்டம்
காங்கென்றுறைத்தோர் காளையனீர்த்தனம்
பாங்கொடுபுரியப் பரிந்துதாம்பூலம்
பெற்றுவந்தென்மேற் பிரியமற்றிருக்கும்
பத்தாவைக்கூட்டி பாதுகார்த்தருள்வீர்
ஐயனேயென்தன் அன்னைதந்தையுருவும்
தெய்வமும்நீரே திருவடிக்கபையம்.

சங்கரபட்டர்-தரு.

சுந்தார்க்குத்தூது சென்றசிவனெனவின்று
அந்தவிதமுடிப்பேன் அஞ்சவேண்டாமம்மா

பத்மாவதி-தரு.

தேவரீருல்மகாதேவி யருளும்பெற்றேன்
இனியாவும்தங்கள்பொருப்பேயன்றி வேறரியேனே

சங்கரபட்டர்-தரு.

அன்பருக்குத்தூது அவகாரமும்செய்த
அறுவைபோ லாதரிப்பேன்அஞ்சவேண்டாம்

பத்மாவதி-தரு.

நிர்த்தனமுதல்பாவம் கற்றுவைத்ததுபோலே
இத்தனியருள்செய்வீர் என்சற்குருநாதா

சங்கரபட்டர்-தரு.

சேதித்தகரமீய்ந்த சுப்பிரமண்ணியரென
ஆதரிப்பேனின்றுன்னே அஞ்சவேண்டாமம்மா

பத்மாவதி-தரு

சூதுதொழில்களங்கே போதமதையெண்ணமல்
பாதுகார்த்தருள்செய்குவீர் பரமகுருநாதா

சங்கரபட்டர்-கலி.

பொருந்துமோருயிரைக்கார்க்க புருடனிப்பிரிந்தமாதே
திருந்தவேயொன்றுசோர்க்க செகத்திற்பொய்சொல்வதல்லால்
வருந்துன்பமனுகாதென்று வகுத்தமூன்னோரைப்போல
இருந்திதைமுடித்தவைப்பேன் இதோசென்றுவருவேனம்மா.

வசனம்.

கேளுமம்மா ராசகுமாரத்தியே ஒரு புயிரைக்காப்பாற்றும் நிமித்தமும் பிடிவாதங்கொண்டிருக்கும் பெண்சாதி புருஷரை ஒன்று சேர்க்கும் நிமித்தமும் நான் எடுக்கும் பிரயத்தனத்தினாலும் சொல்லும் பொய்வார்த்தையினாலும் பாபம்நேராதென்றும் மகத்தான புண்ணியமென்றும் பெரியோர்கள் சொல்லியிருப்பதினால் நீகோரிய இந்த விஷயத்தை முடிப்பதற்கு இதோ கையில் கங்கணங் கட்டிக் கொண்டேன் இனி எனது உருவைமாத்தி கட்டுவன்போல் வருவ மெடுத்துவருகிறேன் பாருமம்மாள் தாயே.

பத்மாவதி வசனம்.

தேவரீர் சித்தம் என்பாக்கியம் சென்றுவருவீர் எனக்கு சாதம் வரும் வேளையானபடியால் இதோநானும் சைச்சாலைக்குட்சென்று வருகிறேன் சுவாமி தருணமறிந்து வார்த்தையாடி தாம்பூலம் வாங்கி வருவீர் தங்களுக்கு நான்சொல்லவேண்டியதில்லை இதோ அனேக நமஸ்காரம் அய்யனே.

பத்மாவதி-தரு.

என்னெண்ணம்போல்நடத்திடுமோ
யேதுமறியேன்பர
அண்ணலறுள்தந்திடவே
இன்ற அனுக்கிரகம்
வாலிதிருபிரைபுவன
வடிவலம்கண்மூன்றுடைய
ஞாலத்திலுன்னன்பர்தமை
காருங்கார்த்தருள்வாய்
உன் அடிமையானஅன்பர்கட்கு
உம்பரும்இணையோபுவன
என்னமோவுனைநம்பினேன்
இதை யீடேற்றவுன்பாரமம்மா

மீஸ்பரியே ஜெகதீஸ்பரியே
மேஸ்வரியே எந்தன்
மீஸ்பரியே ஜெகதீஸ்பரியே
செய்யவேண்டும் மீஸ்பரியே
மீஸ்பரியே ஜெகதீஸ்பரியே
பரமேஸ்வரியே
மீஸ்பரியே ஜெகதீஸ்பரியே
ஜெகதீஸ்பரியே
மீஸ்வரியே ஜெகதீஸ்பரியே
மீஸ்பரியே
மீஸ்பரியே ஜெகதீஸ்பரியே
மீஸ்பரியே(என்)

கட்டுவன்-தரு.

கட்டுவசங்கரப்பட்டனும் நானே நவரசமுந்தேர்ந்த
கட்டுவசங்கரப்பட்டனும் நானே

ட்டுவசங்கரப்பட்டனும் நானே
நாடும்வீராணநகரமி தானே
இஷ்டமாகக்கொலுமுன் செல்வேனே
யின்றுதாம்பூலத்தைக்கொள்ளு வேனே
சுத்திலியக்கியானங்களுந் தேறவே
அதைசார்ந்திடும்பலதாளங்களுந் தீருவேன்
விதிபோல்பலசாஸ்தி ரங்களே
விளங்கவுரைப்பேன்சூஸ்தி ரங்களே
மெச்சும்பலபணிகச்சிதமா தர்க்கும்
வுச்சிதநிர்த்தனலக்ஷணமாய மைக்கும் (நட்டு)

நட்டுவன்-கவி.

மஹிபனேபோற்றிபோற்றி வடதேசத்திருப்போர்நாங்கள்
சகமதிர்பிடாரிகோவில் தனக்குநிர்த்தனமேசெய்வோம்
நிகழ்குறச்சாதிகூட்டம் தேவரீர்சமூகத்தோர்காள்
தகைமையாய்க்கச்சேரிக்கு தாம்பூலம்தருகுவீரே.

வசனம்.

ராஜராஜ மகாராஜ வுத்தண்டகோலாகல ராஜகெம்பீர மகா மண்டலாதிபதி ராமாதிபதி ராஜராஜவித்ரேசமகாராஜ மகாப்ரபு வே! நட்டுவன் சருணஞ்செய்கிறேன் யேந்தலே எங்கள்தேசமோ வடக்கில் வெகுதூரம் நாங்கள்பிடாரிகோவிலுக்கு கூடதாடும் குற தாசிகண்கூட்டம் தங்கள் பெருமையைக் கேள்விப்பட்டோம் இந்த ராஜசமூகத்தில் ஒருநாளைய கச்சேரிக்கு தாம்பூலங் கொடுக்கவேண் டும் தயாரிதியே.

வித்ரேசன்-தரு.

கல்லதவர்புருடர்களோ நங்கைமார்களோ அடா
நட்டுவனேயின்னதென நவிலுவாய்நீயே

நட்டுவன்-தரு.

நவிலுமென்றவீராணநகர் மஹிபரே இந்த
அவனிமீதில்எழில்மிகுத்த அணங்கென்றரிவீரே

வித்ரேசன்-தரு.

எழில்மிகுத்தமாததென்றால் இளமைமங்கையோ
பழுதில்லாமல்ஒதுவாய்நற் பருவமங்கையோ

நட்டுவன்-தரு.

ஓதுவதற்கிணையில்லாத பூதலத்தன்னிலே அவள்
ஒருவர்முகம்பார்த்தரியாள் பருவமங்கையே

விக்ரேசன்-கவி.

அப்படியானுலந்த அணங்குசெய்காணத்தோடு
செப்பரும்நீர்த்தனங்கள் கொருசாகத்தாவீருக்கும்
கூற்புகழமைச்சரேரின் னட்டிவனகிறத்தைக்காண்போம்
இப்பொழுதேதாம்பூலம் மிக்திடுர்காலைக்கென்றே.

வசனம்.

கேளும் மத்திரிமார்களே வடதேசத்காரென்றும் சொல்லுகிற படியால் இவர்கள் நிர்த்தனத்தை நாம் பார்க்கவேண்டும் இந்த ஈட் வெளிடத்தில் தாம்பூலம்கொடுத்தனுப்புவீர் மந்திரிமார்களே.

கட்டிவன் வசனம்.

மகாராஜனே இதோ தாம்பூலம்பெற்றுக்கொண்டேன் நாளை வந்து சேருகிறேரும் போய்வருகின்றேன் வந்தனம்வந்தனம் மகாராஜனே.

விக்ரேசன்-தரு.

மந்திரிப்பிரதானிகளேவாரீர் அந்த
மாதினைச்சிறையில்லைவத்த நாள்கணக்கைப்பாரீர்
சந்ததங்காவல்புரிகின்றூரா சொற்ப
சாதமும்தண்ணீரும்ஒரு வேளைவார்க்கின்றூரா
நெஞ்சினில்இன்னமும்நினைப் பேதை அவளை
நீலிலம்பிறண்டபோதும் ஓடிபார்ப்பேனை
தஞ்சமென்றபோதுதப்பி பேதை அவளை
சாகிறவரையில்சிறை நீக்கிவிடுவேனே(மந்)

விக்ரேசன்-கவி.

விறல்தானேவுறலாகுங்கால் மேதினிதனில்லகுத்த
உறலதானெவனிதமாகாது ஒதொணுவார்த்தையோதி
பரிகாசம்செய்தெதிர்த்து பந்தயமிடுமம்மாதை
ஒருபோதும்விடுகேனென்முன் ஒன்றும்பேசாதேரே.

வசனம்.

கேளும் மந்திரிமார்களே விரலே வுறலத்தினே வீங்குமானல் உறலுக்கு எவ்வளவு வீக்கமிருக்கு இவளென்னசாமான்னியம் ஒரு பெண்பால் என்னே அரசனென்றெண்ணிவிடினும் ஆண்பின்னேயென் றமதிப்பு அணுவளவும் யோசியாமல் வினம்செய்து எதிர்த்து சபதம் கூறியவளுக்காகவா இவ்வளவு சிபார்சு பேசவந்தீர்கள் நன்றியிருக்கின்றது அமைச்சர்களே அவளே என்பிராணபரியந்தம் சிறையிட்டு கீக்கிவிடுவேனென்றும் யோசிக்காதீர்கள் ஒருவார்த்தையும் சொல்லாதீர்கள் மந்திரிகளே.

நட்டுவன் வசனம்.

மகாராஜா நட்டுவன் அநேக நமஸ்காரம் செய்கின்றேன்.

வித்ரேசன் வசனம்.

நல்லது யாவற்ருரும் கூட்டத்தோடு வந்திருக்கின்றீர்களா.

நட்டுவன் வசனம்.

ஆமாம் மகாராசா பட்டணத்திற்கடுத்த மார்தோப்பில் தான் குடிசைபோட்டு இறங்கியிருக்கிறோம் தேவரீர் உத்தரவானுல் ஆட்டத்தை ஆடம்பரம்செய்கிறோம் மகாராசனே.

வித்ரேசன்-வசனம்.

ஆனல் அவ்விதமே ஆட்டத்தை ஆரம்பம்செய்து நடத்துவீர்.

நட்டுவன்-தரு.

சரிகமாபாபா-தனிசனிதபாமகா-மத்தாமாரி-மம்மமம்ம
கக்-கக-கக-ரீரீ-சரிகாமாபாபா-தாநிசாநிதபாபா.

வித்திரேசன் வசனம்.

ஓகோ என்னங்காணும் சொல்லும்போது நடபிடலாயிருக்கது என்னமோ தட்டுவதும் கொட்டுவதுமா யிருக்கின்றீர்களே இதுதானு கச்சேரி போதும்போதும் ஆ ஆ பலபேஷ்பேஷ்.

நட்டுவன்-வசனம்.

மகாராசனே அவர்களைமன்னிக்கவேண்டும். தங்களுக்கு தெரியாதா நாங்கள் குறக்கூட்டத்தானே கடவுளைப்பற்றி கன்னபின்னவென்று மினத்தினேம் இதோயென்மகள் கமலாவதி வருகின்றது ஆட்டத்தை நடத்துகிறோம் பாருங்கள் அரசே.

தாசி வருவது-தரு.

தேவாதேவா சாயாமனேகரா
தேவாதேவா சாயாமனேகரா
வாவாவாவாவாவா தாயேபராசத்தி நீயேவரவா.

தாசி பத்மாவதி-வேறு-தரு.

மன்னவுன்னைக்காணுமலே மனதுமெலிக்தேனே ஏ மன்ன
கண்ணுலின்றுகாணவேண்டி கடிஇவக்தேனே ஏ சுவாமி(மன்)

நித்தமுந்தனசையாலே நெஞ்சமுலர்ந்தேனே ஏ சுவாமி
சித்தமிரங்காதுமேனே தேடிவந்தேனே ஏ சுவாமி(மன்)

பத்மாவதி மாணிக்கம் காட்சி.

வண்டைகாடிபுக்பமோடி வந்தவாறுபோல் — சுவாமி
உந்தனண்டைவோடிவந்தேன் திரும்பிப்பாருமே — சுவாமி(மன்)

கனம்பெரியசுவாமிபாதம் களிப்பாய்பாடியே — சுவாமி
இனிகார்த்திவாய் என்னைப்பாராயோ — மன்னு(மன்)

வித்ரேசன் வசனம்.

சபாஷ் மாதே இந்த முத்தாரங்களைப் பெற்றுக்கொள்வாய் ஆகா இவளுடைய அழகே அழகு சுந்தத்தின் ஒயிலே ஒயில் அதி சுந்தாமாதைச்சேராத சென்மம் ஏன் இவ்வு இருக்கவேண்டும் அட்டா இவளே கூத்தாடுங்குறத்தியாக யிருக்கின்றாளே என்ன செய்வது.

கட்டுவன் வசனம்.

அம்மா இன்னம் ஒருபதம்பாடி கடிப்பாய் மகாராசாவின்மனம் களிப்படையுமபடியாக யிருக்கட்டும்.

தாசி-தரு.

நாதா இனியாளுவாய் — இன்றுகாளே எனைக்கூடுவாய்
நீதா என்மீதேதகாத — அடஞ்செய்தாலும்
மேதேதனதுசொந்த — மாதேனுனைகையாலே நாதா
அன்பாய் என்னருகில்வாரும் — ஓர்வுத்தாரந்தாரும்
பொன்போலிருக்குமெந்தன் — மேனிதன்னை
கன்பாய்த்தொட்டிடில் — என்பாக்கியமேதான் நாதா
கரிகைதோறும்பெரிய — சுவாமியென்னும் தாசன்புகழ்
சொல்லுமெந்தன்சுவாமி — பரிவாயெந்தனைக்கூடி(நாதா)

வித்ரேசன் வசனம்.

கட்டுவா இத்தப்பெண்மணிக்கு ஏன்வீணாய் கஷ்டத்தைக்கொடுத்து நலக்குறாய் வேண்டாம் இதுவறையில் ஆட்டத்தை நிறுத்திவாய்.

தாசி-தரு.

ஆகாயினம்சாலம் — செய்யலாமோதரையே (ஆகா)
மோசம்செய்யாமலென்மீதினி — வாகயெனைவந்துகாரும் (ஆகா)
காடிவுன்னைபார்க்கிலெகு — காளாய்எண்ணியே
நானேவந்திட்டேனேஎன்னைதானே — காருமென்றேனே (ஆகா)

கண்கள்ரெண்டும் — வுன்னைக்கண்டழைக்குதே
கடைக்கண்ணால்பாராய்என்னிடம்ஒருசொல்சொல்வாய்கோராய்

விக்ரேசன் வசனம்.

ஏதேது இனிமேல்தாளமுடியாது ஆஆ இவள்வரைச்சொல்லி க்கேட்டாலுமல்லவோ கல்லுங்கரைந்தோடிவிடும் அப்பா நட்டு வரேபோதும்போதும் இந்தாரும் இந்தமோதிரத்தை இதை பெற் றுக்கொண்டு ஆட்டத்தை நிறுத்தும்நிறுத்தும்.

நட்டுவன் வசனம்.

கல்லத ஆண்டவரே அப்படியே ஆட்டத்தைநிறுத்துகிறேன்.

விக்ரேசன் வசனம்.

இந்த ஆசனத்தில் உட்காருமையா இந்தவண்மையில் மிகுந்த பெண் மாணிக்கம்யார் அவள்பெயர் யாது சொல்லுவீர்நட்டுவரே.

நட்டுவன் வசனம்.

எனது குமாரத்திதான் பெயர் கமலாவதியாகும் அரசே.

விக்ரேசன்-கவி.

ஐயனேவுமதுசெல்வி யாமிவள்மாதேயென்னே
வையகத்தினுயிரைவாங்க வந்தகல்லுருவந்தானே
செய்வதொன்றறியேனெந்தன் நெஞ்சையில்லாசைகொண்டேன்
சையோகித்தாலல்லாது தானருள்புரிகுவீரே.

வசனம்.

அய்யா நட்டுவசுவாமியாரே உமது குமாரத்தியென்று சொல் கிறீர் இவள் உண்மையான மங்கையோ அல்லது உயிரைவாங்க மங்கையோ அறியேன் கண்டவுடன் என்பொருள்யாவையும் கொ ள்ளைகொண்டாளாதலால் இன்றைபத்தினமே இம்மாதை கான்கோர் ந்து உயிர்பெறும்படியாக தயவுசெய்யும் அய்யனே.

நட்டுவன்-தரு

ஆஆஇவ்வார்த்தைதனை ஈரிடத்தில்காட்டவந்தீர்
சாகாசங்களாகயிதைத் தானேயிங்கேமொழிந்தீர்
அநியாயியிதுநீதியோ அவனிமீதில்தவருதலேனும்
ஆனல்காங்கள்போய் வருகிறோம்(ஆஆ)

விக்ரேசன்-தரு.

நட்டுவரேஇந்தவேளைக் இருபைபாரையா அந்த
கங்கையைஇன்றோர்தினம் தன்தென்னைக்காரையா
நாடுகரதுவேண்டும் தருகிறேன்
கூடுமினிவிடை யாவும்புரிகிறேன் (நட்டு)

கட்டுவன்-தரு.

என்னமொழிசொன்னீரிதால் பின்னம்நேருமே
யார்க்கடுக்கும்இத்தவார்த்தை நீரேபாருமே
பன்னவும்பழுதில்லாதசின்ன கொறசாதிகாங்கள்
என்னிலுமிதைப்போலுண்டோ முன்பின்யோசியாதுதாங்கள் (என்)

வித்ரேசன்-தரு.

இப்படிசொன்னால்இனி யாரைநோகுவேன்நான்
தப்பாமலேவுன்னெதிரில் தானேசாகுவேன்
இங்கெனக்குயிர் பிச்சைதருகுவீர்
இல்லையெனிலிதோ வெட்டிஎறிகுவீர் (இப்)

கட்டுவன்-தரு.

கதைக்கஞ்சிமூத்தாருடன் களித்துபேசுவதால்
காலத்தக்கெல்லாம்யீன மென்னும்கொள்கைநேர்க்கதால்
கெகத்திலிந்தநாடத்தை அடக்காதெங்கள்குலத்தில்
சாதிகட்டுகட்டிலைப்பார் நீதமெப்படிபிழைப்பேன்(முக)

வித்ரேசன்-கவி.

கட்டுவசுவாமியாரே நமஸ்காரமொன்றுகேளும்
பட்சமாய்ராச்சியத்தில் பாதியுந்தனுக்கேயென்று
இஷ்டமாய்முச்சலிக்கை எழுதியுந்தனுக்கேதாரேன்
திட்டமாய்மாதைநானே சேர்த்திடதயைசெய்வீரே.

வசனம்.

அய்யா கட்டுவசுவாமியாரே தங்களுக்கு அதேகநமஸ்காரம்செ
ய்கின்றேன் இதனுல்பிழைக்கிடமாகி வுயிரை இழப்பதைவிட எனது
ராச்சியத்தில்பாதி உமக்கேதருகிறேன் இதோமுச்சலிக்கை எழுதிக்
கொடுத்தேன் எப்படியாகிலும் இன்றிரவில் அந்த கமலாவதியென்
னும் மாதை நான்கூடி சுகிக்கும்படிக்கி நிருபைசெய்வீர் அய்யனே

கட்டுவன் வசனம்.

கேளும் ராசனே இத்தனைபெரியவர் கையைப்பிடித்தால் எப்
படிமாட்டேனென்கிறது நான்போய் அனுப்பிவைக்கிறேன் பிறகு
தங்கள்பாடுதான் மகாராசனே.

வித்ரேசன் வசனம்.

இங்கு அனுப்பிவைத்தீரானில் எனது சகசய வார்த்தைகளால்
வசப்படுத்திக்கொள்ளுகிறேன் தயைசெய்வீர் அய்யனே.

நட்டுவன் வசனம்.

கேளும் கமலாவதியே ராசன் வுன்னை வரச்சொன்னார்
வேண்டியபதம்பாடி முக்காலிக்கா பெழுதி வாங்கிவாரும்
இந்த மாதோப்பில் தற்றியிருக்கிறோம் போய்வருவாயம்மா

தாசி வசனம்.

என்னையேனைவரும்படிக்கி ளன்பிதாவிடம்சொல்லியனுப்பினீர்
களாம் அதுவிஷயம்பாத தெரிவிப்பிர்களைக்கிரம்போதவேண்டும்.

வித்தேசன்-தரு.

வரவழைத்திட்டவிதம் தெரியவில்லையோவுன்னை
பார்க்கவரச்சொன்னேன் பெண்மானே வுற்றன்
மனதுக்குகந்தின்று தினத்தானே (வர)

தாசி-தரு.

தெரியவில்லையோவென்று பரியாசமாய்ப்புகன்றீர்
தேசாதிபனேகலந்தானை உன்போல்
ராசனும்எனைத் தொடப்போமோ

தாசி-தரு.

முகத்தைக்காட்டவுன்செந்த பத்தினியோகாதே
முரையலவேகுரைவிதனல் வருத்தஞ்சந்தானே (முத)

வித்தேசன்-தரு.

குறைவென்றுள்காமியர் குலமேதகுணமேதமரதேயினங்கேதே
பரிவாகவந்தென்மனக்குரைதீர்ப்பதே வுயர்வாமேவுண்மைதானே

தாசி-தரு.

மன்னர்க்குறைவில்லை மாறுபடாக்குலமாமேகாக்கள்தாமே
என்குலத்தவர்கேட்டால் இனிசேர்ப்பதிழிவாச்சேபிழைபோச்சே

வேறு-வித்தேசன்-தரு.

சேர்ந்திடாவிடில்கல்ல தாச்சுதிப்போதின்கு
சிந்தனையேன்வந்திடுவாய் சுத்தரியே (சே)

தாசி-தரு.

இப்படியுரைத்தலர்க ளெத்தனைநிருத்தமதை
இந்தமொருங்கேபே இருந்திடாதே (இப்)

வித்தேசன்-தரு.

இத்தகையுரைத்தமொழி நித்தமுத்தர்களிய
இனசுத்தியமடியெந்தன் பத்தினியே (இத்)

தாசி-தரு.

சத்தியமேதது காமத்தினுக்கிதையுன்கை
சாசனமேமுத்திதாரும் ராசதீர (சத்)

வித்தேசன்-கவி.

வாசகமுரைத்துமின்னர் மருப்பதுமென்னேப்போன்ற
ராசர்க்குநீதியாமோ கல்லீதுலேவண்டுமானல்

சாசனமெழுதிப்பின்பு தருகிறேனிப்போதெந்தன்
கைதீர்த்திட்டார்முதகம் அளித்தினையாள்வாய்மாதே.
சேரும் பெண்ணே கமலாவதிஎனுவார்த்தையை சொல்லி
ல்லையென்றுசொல்வது என்னீப்போன்ற அரசர்க்குமக்கு
மா அல்லது முறைமையாகுமா அல்லது முச்சலிக்கை வேண்டுமோ
னால் எழுதித்தருகிறேன். இப்போது என்பிராணன்போய்விடும் போ
ய்விடும்போலிருக்கிறது என்காதலித்தீர்ப்பாய் கனிரசமே.

தாசி - கவி.

ஓடமேகடந்தாலித்த ஓடக்கார னுக்கோர்சொட்டென்று
ஈடில்லாமரையோராயம் இசைமருத்துவரோடின்னம்
நாடியேவேசிப்பெண்ணை ஞாயமுண்ணன்றியோகை
கூடியும்வருமோவேக்தே கொடுப்பீர்முக் கைதானே
வம். கேளும்மகாராசரே வைத்தியர், புரோக்கர், ஆயக்காரர், கணி
கைமாதர் முதலாயினோர் தங்களுக்கு வேண்டியவைகளை முன்னடி
யே பெற்றுக்கொள்ளாவிடில் ஓடம்கடந்தால் ஓடக்காரனுக்கு ஓர்
சொட்டென்பதாய் முடியுமேயொழிய பின்பு கைகூடி வருமோ
வதைக்குறித்து பின்புபேசுவதார் பிரயோசனக்தருமா இது தேவ
ருக்குத்தெரியாதா ஞாயமாக தான் வேண்டுமானால் சாசனத்தை
எழுதி என்னிடம்தாரும் பிறகு எக்தவார்த்தையும் கூறவீர் யேக்
தலே.

வித்தரேசன் வசனம்.

அப்படியா ஆனால் எழுதிக்கொடுக்கிறேன் என் அபராஞ்சியே.
தாசி வம். அரசே இது ஞாயம் அவ்வாறே செய்யுவீர் மகராசு.

வித்தரேசன் அகவல்.

அகிபதியெனவே வீராணாகரை
வீதமுடனாளும் வித்தரேசபாலன்
குறதாசியான கமலாவதிதனக்குமே
நிறமுடனெழுதும் சாசனமென்னில்
இன்றனமுன்னேச் சக்திக்தினுலின்
சென்றவக்தாலும் யாமுனக்கதிய
இடம்பொருள்யேவல் எல்லாமளித்து
அடவுடன்கார்ப்ப தகுவண்மையென்றும்
கனிவுடனிருவரும் கைகோத்தனேசக்கை
மனதிலெக்காலும் மறக்திடேனென்றும்
சர்க்ஷிகளாம்சிவ சங்கரனதிருமால்
ஆகிபூதேவியும் ஆகாயமரியவே
கெடிபெரும்வீரோதி கிருதுதைலன்பதில்
மூடிவுறவழுதியே முடிந்தசாசனமித
நெட்டெழுத்தட்டப்பட நிருபவித்தரேசன்
இஷ்டமாயசொஸ்த கலிகதமுமாமே.

வித்ரேசன் வசனம். பெண்ணே இதோ இதைப்பெற்றுக்கொள்வாய் அடி காமக்களஞ்சியமே இந்த முச்சலிக்கையினால் உனக்குக் காணும் எனக்கு நீயும்ஒருவருக்கொருவர் தொந்தார்த்தமாகினோமல்லவா என்னருகில்வர இன்னமுந் தடையேன் இப்படிவருவாய் ஒருவார்த்தைபேசுவாயடி மோகனங்கியே.

தாசி வசனம். ஆயிரமானலும் இந்த அவசரமுதலாதி பதினாயிரமானலும் இந்த பதட்டமுமாகாது சற்று அப்படியேயிருப்பீர் நல்லது இந்த முச்சலிக்காவினால் என்ன தொந்தார்த்தமாகிவிட்டோம் சர்க்கரையென்று யேட்டிலெழுதினால் தித்திக்குமா மகாராசனே.

வித்ரேசன் வ-ம். ஒன்றும் புலப்படவில்லையே இன்னம் பெண்ணதான்சொல்லுகிறாய் சொல்வாயடி மர்மமிலென்னும் கமலாவதியே.

தாசி-தரு.

அண்ணலேயித்தமொழி நிலைகாட்டவே
அகத்தினிலுள்ளதை முகத்திக்காட்டவே
எண்ணியேமாலையொன் றிப்பவேசூட்டுவீர்
எல்லாவிதத்திலும் சொந்தம்பாராட்டுவீர் (அண்)

வித்ரேசன்-தரு.

அன்னமேயின்னமிதிற் தடையேதடி.
அழகாசறப்பளிமுதல் அணிவாயடிநீயும்
கன்னியமாலையிகோ சூட்டுநேனடி வுன்னை
நாதனும்நானேயெந்தன் மாதுநீதானடி (அண்)

தாசி-தரு.

கழுத்துக்குமாலைதீர் தறித்தகுஞ்சியமோ
கருத்தைப்போல்செய்தால் இதுவேகலயாணமே
செழித்தக்கணியாழி புடித்தப்பிதாம்பரம்
சிக்கைமவிழ்த்து அளித்தாலேகிறந்திறம்(கழுத்)

வித்ரேசன்-தரு.

கல்லதுகைக்கணியாழியும் பெருகுவாய்
கங்கையேபிதாம்பரமிதை அணிகுவாய்
வல்லியேயினியேனும் மனதுதக்கருளுவாய்
வந்தென்தனுவலைத் தீர்த்தருள்புரிகுவாய் (கல்)

வித்ரேசன் வசனம்.

அடி வின்மணிப்பான்ற வன்கண்மணியே நீவிரும்பியதெல்லாந் தந்தேனன்றே இனியேனும் நான்விரும்பியபடி தந்தனன் ஆவலைத் தீர்ப்பாயடி அஞ்சுகமே.

தாசி-கொச்சகம்.

தந்தேனென்றீர்வாஸ்தவமே தரணியெல்லாந்தெரியும்
எந்தணியோர்காலமிவை யாவுமகன்றேகிடினும்
உந்தனதும்ஞாபகத்தில் வுறுதினமும்பெயரும்
பந்தமுடன்என்கரத்தில் பச்சைகுத்தச்செய்திடுவீர்.

வ-ம். கேளும் வீரராணாகருக்கதிபதியே தாங்கள் கொடுத்ததெல்லாம் வீசேஷந்தான் நானே கண்காணுத தேசமெல்லாம் திரியப்பட்டவளாதலால் ஒருக்கால் நானே கைதவறி விட்டுவிட்டாலும் அல்லது களவர் முதலானவர்களாலும் இதனாலே இழக்கக்கூடுமல்லவா எக்காலத்திலும் தங்கள் பெயரை மறவாதிருக்கும்படியாக ஒரு அடையாளம் கொடுக்கவேண்டும் அதாவது எனனெனில் எனது இடதுகையில் இந்தவருஷ மாதம் தேதியும் தங்கள் திருநாமத்தையும் எழுதி பச்சைகுத்துகிறவளால் பச்சைக்குத்தும்படிச்செய்தால் தங்கள முகத்தைப்பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருப்பேன் அதைப்போல்செய்யும் அதிபதியே.

வித்ரேசன் கொச்சகம்.

வர்னப்பசுங்கிளியே மாதகமலாவதியே
இன்னமிறப்பதற்கு யேதமுடியாதலது
பன்னுமிக்கதேவேதன்னில் பச்சைகுத்துவோரெவர்தான்
கன்னமாய்பார்த்திருப்பாய் காளையதுபோல்முடிப்பேன்.

வ-ம்.அடியழகுவாய்ந்த பச்சைக்கிள்ளையைநிகர்த்தகமலாவதியே இனியொரு சுணநேரமாகிலும் இந்தவீரகவேதனையைச்சகிக்கஎன்னால் முடியாது ஆதலால் இரவில் இன்னேரவேளையில் பச்சைகுத்துகிற குறத்தி அகப்படுவது அருமையாதலால் நான் ஒன்று சொல்லுகிறேன கேளும்அதென்வெனில் இவளுடன்வார்த்தையாடினால் நாளையதினம்காலையில் உன் இஷ்டம்போல்செய்கிறேனடிமானே

தாசி-தரு.

காளைவருகிறேனியே கல்லதுபோல் காளைவருகிறேனியே
காளைக்கேபச்சைகுத்த நானும்வார்த்தையாடிருக்க
வேணுமதுவேசிறந்தது மெய்தானதுவும்வேளை (காளை)

வித்ரேசன்-தரு

ஆஆஎன்செய்வேனன்னமே அதோசென்றிடில் (ஆஆ)
பாகேபரிமளமேதாகம் நீராதனிலை
வாகாயிவ்வாறுகூறினேன் வாரும்எனக்கண்ணே (ஆஆ)

தாசி-தரு.

வேண்டுமென்முல்வருமே வீணுட்டரும்பொருளும்
வேணவிதமிதலைவோ மெய்தானதுவும்வேணவிதத்தை (காளை)

வித்ரேசன்-தரு.

மாதேவுன்சொற்படியே இப்போதேமுடித்திடுவேன்
நீதாய்என்றுநிணையாதே சிந்தைமகிழ்வாய்நீதாய் (ஆஆ)

வித்ரேசன். வசனம்

அடா சேவகர்களே அதிகதூரிதமாகவேவாடி நமதுபட்டணத்து வீதியெங்குந்தேடி பச்சைகுத்தும குறத்தி எங்கிருந்தபோதிலும் அதிகவிரைவாக அழைத்துவாருங்கள்.

பொது வசனம். அப்போது பாசாத்தி பச்சை குத்தும் குறத்தியைப்போல் வருவது.

குறத்தி-பிரவேசம்.

அலகிலா திமயமலைவருமலைச்சி ஆபரணன்பிறக்தவளாமாட்டிடைச்சி சிலைவிஜயனடியுண்டவேடனுர்க்கு தேனிலையெனும்வேடச்சிசெம்புலச்சி உலகரியவைதைதனில்மண்சுமக்தவெட்டச்சிசெட்டிச்சியொளிர்வலைச் குறவருலவன்மிக்கோமியான குறத்திபச்சைகுத்துவுகொண்டுவாள். [சி

குறத்தி-தரு.

பச்சைக்குத்தலியோ அம்மே பச்சைக்குத்தலியோ (அம்மே)
பசசைக்குத்தலியோயிக்தப் பதிவளநம அமலைமமாரே
கச்சணிநங்கையரே இளங் கன்னியரே அழகாய்(பச்)
பொன்பொருளும்மேபாகும்தான் போட்டகைகேபோகும்
மண்ணிலிமைறையவும்பச்சை மாத்திரம்தானேவரும்(பச்)
கலிக்குமெலிக்தாலும்அம்மே கல்லுயிர்போனலும்
கான்குத்தும்பச்சையலலோ ஒருகாளிலும்போகாதே(பச்)
அண்ணன்மார்மாமன்மார்கள் அடையாளமிருக்கவென்னுல்
உண்மையாய்க்குத்திவைப்பீர் உடனுள்ளவுமிருக்கும்(பச்)
பெற்றோர்பிறக்தோருமின்னம் மறறோர்பிரிக்தாலும்
எதுதேசம்போனபோதும்இந்தப் பச்சைதான்கூடவரும்(பச

குறத்தி-வேறு-தரு.

அம்மைமாரேஆச்சிமாரே பச்சைகுத்திக்கொள்வீர்
அழகானநங்கைமாரே பச்சைகுத்திக்கொள்வீர் அம்மே
செம்மையரனமையுங்கொண்டு சிறுவுரிகொண்டு
சிங்காரப்பச்சையெல்லாம் குத்திவேனுனம்மே அம்மே
காறுபச்சைநீறுபச்சை கன்னபச்சையுடனே
கதிர்போன்றநெத்திபச்சை கன்னபச்சையுடனே அம்மே
ஏருகிளிபச்சையதில் இருக்குங்கிளிபச்சை
இஷ்டமானபச்சையெல்லாம் குத்திவேனுனம்மே அம்மே
வாணிபச்சையாளன்பச்சை வங்கியெனும்பச்சை
மார்நிறைந்தலவுக்கைபச்சை வளையல்பச்சையுடனே அம்மே
தேளிப்பச்சைசாங்குப்பச்சை சிருவிறல்கள்பச்சை
சிங்காரபச்சையெல்லாங் குத்திவரானம்மே அம்மே

மந்திரி வசனம். ஆரடி பச்சைக்குத்துறிவள் வருவாயடி மகராசனே பச்சைகுத்துறகுறத்தியை பழைத்துயர்ந்தேன் யேக்தலே

விதூஷகன் வசனம்.

கல்லத பெண்ணே பச்சைகுத்துற குறத்தி யிதோவந்துவிட்டாள் அவளே என்னிதம் எழுதி குத்தச்சொலலுங்ரூபோ சொல்லாய் எனக்கொன்றும் தெரியாது.

தாசி வசனம். மகாராசா எனது இடது கையில் இக்தவருஷ மாதம் தேதிலையும் தங்கள் கையெழுத்தையும் தேவரீர் கையினலெழுதி இவனே குத்தச் சொலலுவீர்.

விக்ரேசன்-வசனம்.

அதுவும் அப்படியா இதோ வுன தகைகளை கீட்டுவாயடி பெண் புயிலே ஆ ஆ உன்கையைத் தொட்டபோதே என்மனம் தடுமாறு கின்றதே ஆன்செய்வேன் இதோ எழுதினேன் விரோதிருது வரு ஷம் தைமாதம் ஒன்பதாக்கேதி விக்கிரேசமகாராசன் கையெழு த்து அடிகுறத்தி சிக்கிரம்குத்தவாயடி நோகப்போகிறதுபத்திரம்.

குறத்தி வசனம்.

அம்மே இப்படிக் கையைக்காட்டுவாய் இதோ நான் குத்துகிற போது இதைப்பார்க்காமல் அந்த பக்சை மரத்தைப்பார்த்து பல் லைக்கடித்துக்கொண்டு கான்பாடும் கதையை கவனமாய்க் கேட்டுக் டுக்கொண்டு இருப்பாய் அப்போது நோகாமலிருக்கும்.

விக்ரேசன்வசனம். அடிகுறத்தி நோகப்போகிறது சிக்கிரமாகட்டும்

குறத்தி வசனம். அதிலும் நோகாமல யிருக்கவேண்டுமாம் சிக்கிரமாக குத்தியாக வேண்டுமாம ஆ இனிமேல் கையை யாட்டப் போகிறேப் இந்தக்கதையைக் கேளும் அம்மே.

குறத்தி-தரு

திருவளரும்அயோத்தி — தகரதனரியின்ற
ஸ்ரீராமலக்ஷ்மணரும் — சீதையம்மனுடனே
மருவுரிகள்தான்தரித்து — வனவாசம்சென்றார்
மாபாவிராவணனும் — வந்தனம்மேவனத்தில்
வந்தக்கொடுமபாவி — மகாமாயங்களேசெய்து
வஞ்சணையால்சீதைதனை — கொண்டுசிறைவைத்தான்

விக்ரேசன் வசனம் அடி குறத்தி பச்சைகுத்தி ஆய்விட்டதா.

குறத்தி வசனம்.

அரசே குத்திதான் ஆகவேண்டு ஆக்கப்பொறுத்தவர்கள் ஆரப்பொறுக்கக்கூடாதா ஆசுவாமி அம்மேகையைஅசக்காதே பல் லைக்கடிச்சிக்கிட்டு யிருப்பாய் அம்மே

குறத்தி-தரு.

சிந்தைமிகநொந்தருளும் — அந்தலக்ஷ்மணரும்
தேடியல்லோபோயனுமான் — வானரங்கள்தனையே
தனைகொண்டுதென்கடலை — அணையதனைக்கோதி
தென்னிலங்கைபோய்சேர்ந்து — வல்லசுரர்படையை
இணையில்லாராவணனை — யாவரையுமாய்த்து
இலங்கைதனிலிபீஷணர்க்கு — கலம்பெறவேயளித்து
சீதைதனைசிறைமீட்டு — ஆதிரெகுராமர்
சென்றுதிருமுடிபுனைந்து — அன்றிலங்கையாண்டார்
பூதலத்தில்மாதர்களே — புண்படவேசெய்வோர்
ஏவதையடைவரென்னே — யோதவர்களம்மே(திரு)

குறத்தி வசனம்.

இதோ குக்கியார்சுது சுவாமி இனிமேல் என்பணத்தைக் கொ
டுத்துவிட்டு வேலையைப்பாரும் நான் பொல்லாதவளா யிருப்பேன
என்காசையைகொடுக்காவிட்டால் ஊசியை அடுப்பில்போட்டுவிடுவேன்

வித்தரேசன் வசனம்.

அடி குறத்தி கல்லது சந்தோஷம் இத்தாபணம் நீசெல்லுவாய்.

குறத்தி-தரு

வாழவேணும்வாழவேணும் வல்கிஷங்கள்வாழவேணும்
மன்னருடன்கன்னியரும் கன்னியமாய்வாழவேணும்(வா)
மங்களமாயெங்களைப்போல் மனமகிழ்க்தசேரவேணும்
வள்ளலருளினுலகற்பம் வள்ளபடிகேர்ணும் (வா)
வெற்றிவீரபுத்திரன்போல் புத்திரன்பிறக்கணும்
மெய்ப்புறமென்சொற்படிக் செலிததல்லோசிறக்கணும்(வா)
மேலைவிமைத்தரோடுவேகதன் மகிழ்க்தொருமையாகணும்
மணிமகுடம்சூட்டிசுப மங்களமாய்வாழணும்(வா)

தாசி வசனம்.

அடிமாதே இவரூர் நானர் இப்படிக்கெல்லாம் சொல்லுகின்ரு
யே என்னையாரென்று நினைத்துச்சொல்லுகிறபடி குறமாதே.

குறத்தி வசனம்.

அடியம்மே குட்டிச்சுவத்தில் மூட்டிக்கொள்ள வெள்ளெழு
த்தா அவ்வளவுதான் எனக்குத்தெரியாதா நான் இந்த வுலகமெல
லாம் திரியப்பட்டவள்தான் நீ என்னைக்கேழ்ப்பதில் என்னபிரயோ
சனம் எல்லாம் எனக்குத் தெரியும்தெரியும் அம்மே.

தாசி வசனம் கல்லது நீபோய் வருவாயடி குறமாதே.

குறத்தி வசனம்.

இன்னேரம் என்புருஷன் தேடுவான் என்பிள்ளைகுட்டிகளும்அ
ழுதுகொண்டிருக்கும் நான்போய்வருகிறேன நீங்கள் சுகமாயிருங்கள்

வித்தரேசன்-கந்தர்த்தம்.

சித்திரவிழிமடமானேவுனைதான் பார்த்திடவேமுன்னுள்
மெய்த்தவமென்னவியற்றினனே இங்குற்றனைதானறியேன்
புத்தமுதத்தவரத்தினமே மலர்மெத்தையிலிமீதேறி
சித்தசனவெட்சி யொளிக்கவும்காமினி.

தாசி-கந்தர்த்தம்.

மாதர்களெவரும்மயங்கிடு மெழின்மிகுமாரூப்தீராய்
காதனிமுனையலலா தினியேதிதகாரணனேயரிவார்
ஆதலினலனேபேதனுவேணும் பேதகமிணைபாதீர்
சீதளமலரிணைமீதி லன்பாகவே.

தாசி வசனம்.

கேளும் அரசனே பொழுது விடியற்காலமானதால் கூட்டத் தார் தேடுவாராகையால் நீதான் சத்தியமாகபென்புருஷன் கூடிய சிக்கிரத்தில் வருவேறெனென்று வேண்டிய சத்தரம்ளைச் செய்து குருவாகிய சங்கரப்பட்டரை அழைத்துக்கொண்டு சிரைக்காலைக் குப்போய் சேர்ந்திருக்கிறபோது பத்மாவதிக்கு கெற்பர் தரித்துப் பத்துமாதமும்சென்று ஒரு ஆண்சந்தானம்பிறக்க அப்பாலகனுக்கு வீரகாந்தனென்றும் நாமகரணம்வைத்து ஒரொருமேனி பொழு தொருவண்ணமாய் வளர்ந்துவரும்போது ஐந்தவயதில் சத்தியதர மகாராசனுடைய அனுமதியால் கௌகெரிடம் வித்தியாரம்பத்திற் கனுப்ப வீரகாந்தன் அவரிடத்தில் சகலசாஸ்திரங்களும் கல்வி முதல் அறிபத்துகான்கு கலிக்கியானமும் கொண்ணுத்தாறு தத்து வமும் தேர்வையாகி தாயாரைக்காணும்படி வீரகாந்தன்வருவது.

வீரகாந்தன்-கவி.

சத்தியதரன்சொற்சொண்டு காயறன்படிக்குவிஸ்வா
மித்திரமுனிபாற்சென்று விளம்பறபத்துகான்காம்
மெய்த்தவக்கலிக்கியானங்கள் வேணதமுணர்ந்துதாய்பால்
சித்தமாய்வீரகாந்த நீரனும்வருகின்றனே.

வீரகாந்தன்-தரு.

வீரகாந்தநீரன்வந்தனனே வீராதிவீரன்(வீர)
வீரகாந்தநீரன்வந்தனன் மேதினிக்கிவனேநிறந்தவன்
மார்தனமெனவேபயின்றிடும் கேரில்தாய்தனியேபணிக்கிட(வீர)

சித்தவித்தகள்யாவுந்தேர்ந்தவன் மாமுனிவிஸ்வா
மித்திரரிடத்தன்பு வாய்த்தவன்
பத்தினிபத்மாவதிசெய் மெத்தபத்தையேமெத்து
அத்தனுக்கினிய பராசத்திபறளாலுதித்த(வீர)
செஞ்சிலுக்கணை கூறமிலக்கிடவே
ஆறகேபூற தஞ்சிதப்பணிகுலுக்கிடவே
பஞ்சபாணனைமிஞ்சுமிலகெழுஞ் சமர்த்தயுமிஞ்சிவ நிர்வரு
ளஞ்சிவருளமுங்களித்திட எஞ்சுதாய்மொழியுங்கெலித்திட (வி)

வீரகாந்தன்-கவி.

சக்ததமெனவளர்த்த தாதைகளன்னைசொற்போல்
முக்துரைவிஸ்வாமித்திர முனிவராசிரம்மஞ்சென்று
அக்தமாங்கலிக்கியானங்கள் அனைத்துமேகற்றுணர்ந்து
வந்தனன்என்தாய்பத்மாவதியெங்கேவுரைத்திடீரே.

வம்சகேளுங்கள் என்னை இளமையில் அருமையாக வளர்த்துவந்த தாதிமார்களே தாயார்மொழிப்படிக்கும் என்னை மூதாதை சத்திய தரிமகராசன் கட்டளைப்படிக்கும் விஸ்வாமித்திர மகாரிஷி ஆசிர் மம்சென்று மிகவும் அருமைப்பருமையான கல்வி யாவும்தேர்ந்து

வந்தேன் எனது அன்னையின் திருவடிகளில் நமஸ்கரித்துக்கொள்ள வேண்டும் ஆனதால் என்தாயார் எங்கேசொல்லுங்கள் தோழிகளே.

தாசி வசனம்.

கேளுமப்பாவீரகாந்தாளங்கள் ராசகுமாரத்தியும்உனதுதாயுமரசி ய பத்மாவதியம்மன் சிறைச்சாலையிலிருக்கிறார்களப்பாராசகுமாரகா

வீரகாந்தன்-வசனம்.

சருணம் சருணம் என்னருமைத்தாயே உன் பாதாரவிந்தங்க ளுக்கு அநேக நமஸ்காரம்.

பத்மாவதி-தரு.

வாழிவாழி என்னருமை மைந்தனேவாழி
தாழ்வில்லாதென்னுரு மெந்தன்தனையனேவாழி

பத்மாவதி வசனம்.

வாழி என்னருமைச்செல்வனே உன்னை அருமையாகப்பெற்றே வளர்த்து நான்குவயது குழந்தையில் பிரிந்தநாளாக யின்று தான் காணும்படிகோர்ந்தது அடா என்கனிரசமே என்கலிதீர்க்கவந்தகண் மணியே அப்பாரீ இந்த பத்துவருஷமாக கோசிகமுனிவரிடத்தில் என்னென்ன வித்தைகள் கற்றுதேர்ந்துவந்தாய் உன் அழகுவாயை த்திறந்து சொல்வாயடா குமாரகா.

வீரகாந்தன்-கவி.

அகரம்அப்பியாச முதல்கலிக்கியானங்கள்
அறுபத்துநான்கு மற்றவைகள்யாவும்
விஸ்வாமித்திரர் அருளால்தேர்ந்துவந்தேன்
விந்தையுடன்கேள்வி யுற்றேன்தாயேயென்னைப்
பசுஷமுடனீன்றிடு மென்தந்தையெங்கே
பழுதாகநீயையி லிருப்பதேது
கஷ்டமுடன்சிறைவைத்த வீரன்யாவன்
கணப்பொழுதில்கான றியக் கழறுவாயே.

வ-ம். கேளும் என்தது அன்னையே எனது குருமூர்த்தியினிடத்தில் ஆறுசாஸ்திரமும் அறுபத்துநாலு கலிக்கியானமும் மனுவிக்கியா னம் தொண்ணுத்தாறு தத்துவம் இந்திரசாலம் மயேந்திரசாலம்முத லிய மாயவித்தைகளும் தங்களாசீர்வாதத்தினால் யேதோகூடியவரை யில் தேர்ச்சியடைந்து தான்வந்திருக்கின்றேன் ஆனால் ஒருவிஷயம் கேள்விப்பட்டுவந்தேன் தாங்கள் கடுஞ்சிறையில் இருக்கவேண்டிய காரணம்யாதது அப்படி சிறையில்வைத்த சூராதிசூரன் யாவன் இத் தினபாட்டிற்கும் என்னையின்ற தந்தையானவர் யெங்கே சீக்கிரம் தெரியச்சொல்வாயம்மணி.

பத்மாவதி-கவி.

தந்தையெனகென்றேபாலா சாத்தினுயதனைக்கேழ்க்க
வெந்தையுங்கலங்குதேயென் செய்வேனுன்தந்தைதன்ன

அந்தமாந்தீனுக்கு அனுப்பிவைத்தேனேயுமிங்கே
விக்தையாய்ச்சிறையில்வைத்தான் வீராணத்தரசன்தானே.

வசனம்.

அய்யய்யோ மகனே வீரகர்த்தா எனது தகப்பனு நெங்கேயென்று கேட்டதற்கு உனக்குநான் என்னபதில்சொல்வேன் தந்தையென்றுசொன்னவுன்வாய்ச்சொல்லைக்கேட்டதும் என்வயர் பத்தியெறிகிறது அப்பா உனது தந்தையைப்பிடித்து சிறைப்படுத்தி அந்தமாந்தீவுக் கனுப்பிவிட்டு என்னையும் சிறைச்சாலையில் வைத்தவர் வீராணகரத்தரசனென் றறிகுவாயடா செல்வமே.

வீரகர்த்தன்-தரு.

தந்தையைசிறைபிடித்தராசன் சமர்த்தைப்பார்க்குறேன்
கொடிதனிலனர்த்த மாக்குறேன்
அவன்எந்தலோகம் போனபோதும் யினிவிடுவனே
சென்றுமும்தடை படுவனே
அந்தமாந்தீவுக்கனுப்பும் அந்தகன்பதியை
கொடிதனில்அனுப்புதல் நிலையே
சிண்டுசிண்டாயவன் பெண்டு பிள்ளைகளைசிறைகாடுவேன்
கொடிதனில்சூறை யாடுவேன்
உன்னைச்சிறைதனில்லடைத்தவன் சிறம்வருளவதைக்கிறேன்
குழிதனில்மறையப் புதைக்கிறேன்
சின்னபின்னமாய்காடு கதரையும்
சிதறஅடிக்குறேன்படைகளை கதறமடிக்குறேன்(தந்)

பத்மாவதி-தரு.

அப்பாஎன்வார்த்தைதன்னைக் கேளடாகொஞ்சங்கேளடா
எதுவும்ஆத்திரப்படுதல் தகாகடாதகாதடா
மெய்பாயெனையுமுங்கள் அப்பனையுபரித்து
இப்பாரில்விட்டதன்றி இல்லையதைக்குறித்தேன் (அப்)

வீரகர்த்தன்-தரு.

பரித்துச்சிறையில்வைத்த துடுக்கன்தலையைவெட்டி
தரைக்குள்புதைத்திடாமல் அறைஷணத்திலேனே(பரி)

பத்மாவதி-தரு.

சிறையில்வைத்ததன்றி வொருதிண்மையை மகனே இனம்
கேரில்செய்ததில்லையோட்ர் பிதவும்வுண்மையே அப்பாவுண்மையே
பெருமையுடனெனவார்த்தையைக் குறையைக்கேளடாயெந்தன்
வருமையகற்றிடுங்கண்மணி யேபாலகா (சிறை)

வீரகர்த்தன்-தரு.

மிகுத்தபெலமும்நுவன் குலமும்நலமும் அரை
க்ஷணத்தில்நானழித்திகரன் சிதைக்காமல்போகேனான்(மிகு)

பத்மாவதி-கலி.

மகனேவுன் பிதாவை யந்தமான்றிவுக்கனுப்பியென்னை
தகைகிறைவைத்ததன்றி தாழ்வொன்றும்செய்தலில்லை
நகரொடுசேனை தன்னை நலியச்செய்யாமலந்த
மகிபண்பிடித்துக்கட்டி வருவாய்பின் னுரைசெய்வேனே.

வசனம்.

கேளுமப்பா எனது குமாரகா அந்தராசன் உன்தந்தையை அந்தமான்றிவுக்கு அனுப்பிவிட்டு என்னையும் கிறைவைத்ததன்றி எங்களுக்கும் எங்களைச்சார்ந்த இன்னம் மற்றவர்களுக்கும் அனுவளவாகிலும் தன்பம்செய்ததில்லை ஆனதால் இப்பவும்நான் சொல்வதைப்போல் நீசெய்யவேண்டியதென்னவென்றால் அந்தராசனை வயிர்ச்சேதம் செய்யாமல் பின்கட்டாகக்கட்டி என்னிடம் கொண்டுவந்தால் அதின்பிறகு தெரிவிப்பேன் குமாரகா.

வீரகாந்தன்-கந்தர்த்தம்.

சிவசத்தியளித்தமையும் திருநீறும்தாய்பார்க்கொண்டு
தவறில்லாதாதைதன்பால் சதுரங்கசேனையோடும்
நலமகனெனவேதோள்மேல் நற்றனுசாங்கைக்கொண்டு
அவனியாள் வீரகாந்தன்

கரு.

ஆரபாரம்செய்துகடந்தான் சமர்புரிய
வீரபாஷை கூரிதடர்ந்தான்
தாரணிதடுங்கரேண பேரிகைமுழங்கிடவும்
பாரியவீராணகர் கோரினில்கலங்கிடவும் (ஆர)

பொது வசனம்.

வீரகாந்தன் வீராணகரத்தில் நுழைந்தபோது வித்ரேசன் கண்டு சொல்வது.

வித்ரேசன்-கலி.

ஆடாசிருவனேயிங் கருஞ்சமர்செய்யவந்தாய்
பேரொடுதாய்தகப்பன் பெயர்யாதுநிலமைபார்க்கில்
வீரமாயமர்களத்தை வினையாட்டென்றெண்ணினையோ
கூறுவாயுத்தஞ்செய்யக் கூசுதென்கரங்கள்தானே.

வசனம்.

அடா அடா சிருவனே அச்சமில்லாமல் சமருக்குவந்தாய் நின்பேரும் ஊரும் தாய்தகப்பன் பெயரும் தெரியச்சொல்வதோடும் வீரியங்கூறிவந்தாய் நான்கேழ்க்கும்கேள்விக்கு பதில் சொல்லடா தம்பியே.

வீரகாந்தன்-தரு.

தந்தைதாய்பவரென்றுரைத்தாய் அடாசிறி
மைந்தனென்றேமொழி படித்தாய

தந்தைதாயுமுன்தன்பேறும் வந்ததுமறிந்திடடா
மூர்க்கியக்கணியினுலேகிந்தையில் தெளிந்திடடா(தந்)

வித்ரேசன்-தரு.

வில்லெடுக்கமனம்வல்லியே சிருவனேநீ
சொல்லுமொழிமிகக் கல்வியே
வல்லவனேநீதொடுக்கும் வாளிகளென்சேனைகளே
அல்லலுக்குள்ளாக்குவதை நல்லதரித்துமுன்னில்லாய்(வில்)

வீரகாந்தன்-தரு.

சமர்களத்தினிலுறவதுபேசுவ தாரடா உந்தன்
சமர்த்தறிந்தபின்மொழிகுவா என்னிடம்போறடர்
புகழ்சார்ந்திடவேபழி தீர்க்கிடவேநீ
யேமாந்துடனேமூகம் சோர்ந்திடவே
வளைசக்கரம்போலவே தருவீர்கணைசொரிந்தனது
மூக்கியபடைகளேதுறத் தினேன்பாரடா(சமர்)

வித்ரேசன்-தரு.

கொடிக்குள்மிகுகணை தொடுக்குமதிபலம்காட்டினுய்
இதோ விடுக்குமுனகணை பொடிக்கவுஞ்சரம்பூட்டினேன்
அடாகோகாதேயினி சாகாதே
வுன்னுலாகாதே வந்திபோகாதே
நட்பமறிந்திடாத தப்பிலிப்பயலே தனித்து
இப்படிதள்ளுவதன்கப்ப னென்றெண்ணியேயெனை (கொ)

வீரகாந்தன்-கந்தார்த்தம்.

தாய்மொழியதுபோலிங்கு சமர்செய்தபடைகள்தன்னை
மாயஞ்செய்தகற்றிவிட்டு மகிபனைநிறைபிடித்தோம்
தூயதோர்தேர்க்கால்தன்னில் தணிவுறப்பிணைத்துக்கொள்வீர்
தேசத்தைகாடி நாமும்.

தரு.

ஜெயம்ஜெயமெனகடப்போம் வீரர்களேநாம் (ஜெ)
தயவாகோகிகமுனியருளாலுட் சிவபாசத்திலிருபையாலு
வெற்றிஅடைந்தோமினி ஜெயம் ஜெ

வித்ரேசன்-தரு.

ஆஆஇதென்ன ஆச்சரியம்ஆச்சரியம் தெய்வமே இ
அரியச்சிருவன்கையில் குறைவந்திடலாச்சே தெய்
வாகாய்ப்படைகளெல்லாம் வகைகெட்டுமுறிபட்டு தெய்
வந்தநிலேதெரியாதெத்த தெதியுமாகினரே தெய்
பாலனின் எண்கண்ணுல்பார்த்தபோதல்லோ தெய்
ந்தன்பலமும்குறைந்து நிரேகம்நிலையுங்குலைத்தனே தெய்

ாலமோ என்பொல்லாக் காலஞ்செய்கோலமோ தெய்வமே
தன்னந்தனிகொண்டுபோய் என்னசெய்திடுவானே தெய்வமே

வீரகாந்தன்-வசனம்.

அடா வீராணாகர் வேந்தனே உன்னை என்தாயார் யிட்ட கட்டளைப்படிக்கி பிடித்துவந்தேன் இதோ நீயிருக்கவேண்டிய இடம் தெரிகிறதா இந்த சிறைச்சாலைதான் இதற்குள்ளேபோவாய் சீக்கிரம்

வித்ரேசன் வசனம்.

அப்பா ராசகுமாரகா நான் என்னகுற்றம் செய்தேனென்று என்னுடைய தாயார் இப்படிச் செய்யச்சொன்னள் தெரிவிப்பாய்

வீராகாந்தன் வசனம்.

என்தாயாரிடம் சென்று கேட்டுவந்துசொல்லுகிறேன் யிவ்விட இருப்பாய்.

வீரகாந்தன் வசனம்.

அன்னையே நான்பிடித்துக் கட்டிக்கொண்டுவந்த அரசன் நான் என்னகுற்றம்செய்தேன் என்னை இவ்வாறு கட்டிவரச்சொன்னளென்று கேட்கிறுனம்மா.

பத்மாவதி வசனம்.

அடா குமாரகனை வீரகாந்தனே செய்யவேண்டிய ஆக்கினையைச்சொல்லுகிறேன் சற்றேபொரு. அந்த சிறைச்சாலையிருக்குமிடத்திற்குச் செல்லுவோம் வருவாயடா.

பத்மாவதி வசனம்.

ஆ ஆ ஓராசனே நீரும் ஒருசிருவனுக்கு அடங்கும்படியானகால மிருந்ததல்லவா.

வித்ரேசன்-கவி.

வையகமெல்லாமேற்றும் மகாராணியாளேபோற்றி
செய்யாதகுற்றமென்ன செய்தனென்றெனையிவ்வாறு
கையவேகொண்டுவந்துன் நற்றவப்புதல்வனுலே
பையவேசிறைக்குள்வைத்தாய் பகருவாயரிவிலேனே.

வசனம்.

சருணம்சருணம் சிறைச்சாலைக்கு வெளியிலிருந்துபேசும் மகாராணியே தங்களுக்கு நான் யென்னகுற்றம்செய்தேனென்று உனது மைந்தனல் என்னை பின்கட்டாகக் கட்டிக்கொண்டுவந்து இவ்வாறு சிறைச்சாலையிலடைத்தீர்கள் அதற்கு காரணம் தெரியவில்லையே ஓ யும்மணி அதைவிபரமாக வுரைப்பாய்

பத்மாவதி-வசனம்.

ஆனல் இன்னம் தங்களுக்கு இன்னவிபரமென்று தெரியவில்லையோ.

வித்ரேசன் வசனம்.

எனக்கு ஒருவிபரமும் பேற்படவில்லையே

பத்மாவதி-கவி.

போற்றியென் றுரைத்தநாதா போற்றியுன்பொன்னடிக்கு
மாற்றரும்மகத்வனத்தில் வந்தரென்னைக்கண்டு
சாற்றியமொழிக்குநானே சபதம்செய்திட்டவாறு
நேர்த்தியாய்முடிந்ததின்று கேர்ந்தகாணமிதாமே.

வசனம்.

எனக்கு வந்தனஞ்செய்த பிராணநாதா இதோ தங்கள் கிருபாகடாக்ஷத்துக்கு அநேக நமஸ்காரம்செய்கின்றேன் முன்புநீர் என்னை சிங்காரவனத்திற்கண்டு காந்தர்வமாகச் சேரவேண்டுமென்ன நான் மருத்துவரைக்க அதற்கு தேவரீரும் சபதமிட்டீரன்றே உடனே பதில்சபதம் நானென்னசொன்னேன்ஞாபகமிருக்கின்றதா அந்தபந்தயம் இன்றுதான் முடிந்தது அரசே.

வித்ரேசன் வசனம்.

ஆ ஆ அப்படியா நல்லது உன்னை என்னுடைய பட்டணத்தில் அருஞ்சிறையிட்டேனே.

பத்மாவதி வசனம்.

அது வரஸ்தவமே இதோகபாடந்திறந்தேன் வெளியில்வாரும் சரணம் சரணம் பிராணநாதா உன்னைக்கட்டிவந்தவன் உமது புத்திரனே வேறென்னசொல்லுகின்றீர் சொல்லும்பார்ப்போம்.

வித்ரேசன் வசனம்.

ஆ ஆ உன்னைக் கடுஞ்சிறையிலல்லவோவைத்தேன் அப்படியிருக்க உனக்கு பிள்ளையேது சொல்வாயடி மாதே.

பத்மாவதி-தரு.

சாற்றுமென்றமன்னவரே சரசமாய்முன்புநீர்
கூத்தாடுங்குறத்திதனைக் கூடினதுண்டோ

வித்ரேசன்-தரு.

குறத்திதனைக்கூடினதார் கூறுங்கோதையே
குழந்தையுனக்குண்டாகிய விதஞ்சொல்வாய்நீயே

பத்மாவதி-தரு.

அந்தக்குறமாதுநானே சந்தேகிப்பீரோ
இந்த அடையாளமும் சாசனமும்அறிகுவீர்நீரே

விக்ரேசன் - தரு.

அன்னவளிடத்திலிதை அறையலண்ணுதோ
இன்னமிதைமெய்யென் றெண்ணியிடமுந்தானேதோ

பத்மாவதி-சவி.

சாசனம்நிலையேயென்று சாற்றியசொற்போலின்று
பேசுநீர்அங்கென்னையைப் பிடிக்கையில்நீரோகாதன்
கசனிதரிவானென்ற தில்லையோ அதுபோனும்
ஆசையாய்மிகுந்தபச்சை யாவ்கையெழுத்தேமன்னு

வசனம்.

ஆஆ அன்றுநீர் இந்தமுச்சலிக்கை யெழுதிக்கொடுத்தபோதே இந்த சாசனம், கணையாழி, கண்டசர முதலான ஆபரணங்களும் நிலையல்லவென்று நான்சொன்னதை இப்போது நீரே சொல்லிவிட்டீர் பஞ்சணியின்மீதில் முதலில் என்னையைத்தொடும்போது காமருவருங் கலக்கிருந்த வெடியர்காலம் பிரிந்துவருகிறபோது தேவர் மூவரறிய நீர்தான் என் உண்மையான புருஷனென்றும் இன்னம் கொஞ்சகாலில் தங்களிடமே வந்துவிடுகிறேனென்றும் சென்றேனை அதையும் இல்லையென்பீரோ அதுவுமல்லாமல்தடையன்றி கடவுள் கண்பார்ப்பாரென்றும் சொன்னீரே அந்தக் கடவுள் கண்பார்த்துப் பிறந்தவன்தான் இந்தபாலன் அந்தவார்த்தையு மில்லையென்பீரோ அப்படி அதைகளெல்லாம் அபத்தமாகவேயிருந்தாலும் இந்தப் பச்சையாருடைய கையெழுத்து இதைப்பாரும் பிராணநாதர்.

விக்ரேசன் வசனம்.

நல்லது நிறையிலிருந்தநீ இங்குவந்ததெப்படி எனக்கு விபரமாகச் சொல்லும்.

பத்மாவதி வசனம்.

ஸ்ரீபத்மாவதியம்மன் உனுக்கிரகத்தின்படி அமைத்த சாரகத்தின்வழியாகத்தான் வெளியில்வந்தேன் நாதா.

விக்ரேசன் வசனம்.

சபாஷ் உன்னுடன்கூடவந்த நட்டுவன் யாரோ சொல்லாய்.

பத்மாவதி வசனம்.

எனக்கு இளமையிலேயே நிர்த்தனாதலானதையும் கற்றுக்கொடுத்த எனக்கு குருவாகிய சங்கரபட்டரென்பவர் நட்டுவனாகவந்தார்.

விக்ரேசன் வசனம்.

ஆஆ பெண்ணே பத்மாவதி உன்தன்மையை நானென்ன சொல்லப்போகிறேன்.

பொது வசனம்.

இப்படி வீரகாந்தன் வித்ரேசமகாராஜனைப் பிடித்துக் கட்டி கொண்டுவந்து தாயார் இருக்கும் சிறைச்சாலைக்குக் கொண்டுவந்து விட அப்போது பத்மாவதியினுல் நடந்தசங்கதிகள் யாவற்றும் தெரிந்துக்கொண்டு பிறகு தன்குமாரனென்றும் தன்தேவியென்றும் தெரிந்துக்கொண்டு வித்ரேசமகாராசன் மனது சந்தோஷமடைந்து ஆனந்தசாகரத்தில் மூழ்கினவன்போல் களிப்படைந்து தனதுகுமாரனுகிய வீரகாந்தராசனுக்கு வீராணபுரியை மகுடாபிஷேகம்செய்துவைத்து மகாசந்தோஷத்துடன் மூவரும் ஏகமனதோடு வீராணநகரத்தை அரசுபுரிந்துவருகிறர் இக்தநாடகத்தைப்பாடினோர் ஆடினோர் கேட்டபோர் கேளாதபோர்கள் ஆல்போல்தழைத்து அருகதுபோல் வேரோடி மூங்கில்போல்தழைத்து முசியாமல் வாழக்கடவதென்பது.

மங்களம்-தரு.

மங்களம் மங்களம் ஜெயசுப மங்களம் மங்களம்

ஐங்கரன்வேலவர்க்கும் அன்னைகலைவாணிக்கும்
சங்கரனுடன்பராசத்தி என்தாயார்க்கும்(மங்)

ஆதிகாருயணர்க்கும் அஷ்டலக்ஷ்மியர்க்கும்
தீதிலன்பறெவர்க்கும் ஒதருங்கவிவாணர்க்கும்(மங்)

அவனியாளரசர்க்கும் அறும்பாத்தபுறத்திற்கும்
நலமாய்பாலகிருஷ்ண ஞயகரவருக்கும்(மங்)

சரிதைஇதைச்சொல்வோர்க்கும் சாந்தமுடன்கேட்போர்க்கும்
பரிவாயெழுதுவோர்க்கும் பண்பாய்நடத்துவோர்க்கும்(மங்)

பத்மாவதி மாலியிடி நாடகம்

முற்றிற்று.

பராசக்தியம்மன் திருவடி வாழ்க.

---

14 9100
சென்னை-600 008.